உ

சிவமயம்

# ஸ்ரீ காயத்ரி மந்திர மகிமை



ஆசிரியர்
காயத்ரி சித்தர்
ஆர். கே. முருகேசு சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ காயத்ரி மந்திர மகிமை

ஆசிரியர்
காயத்ரி சித்தர்
**ஆர். கே. முருகேசு சுவாமிகள்**

**ஸ்ரீ காயத்ரி பீடம்**

**"ஸ்ரீ நகர்"**
**82, லேடி மெக்கலம்ஸ் ட்ரைவ்,**
**நுவரெலியா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பிள்ளையாக ஈந்த என் அன்னை, பிதாவுக்கு எனது முதல் வணக்கம் கூறி ஆன்மீகத்துறையில் என்னை ஆட்கொண்டு வழி நடத்தும் ஸத்குருமூர்த்தியின் திருவடிகளுக்கு பல கோடி வணக்கங்களை காணிக்கையாக்கி இந்த காயத்ரி மந்திர மகிமை என்ற நூலை எழுதுகிறேன்.

ஆசிரியர்

காயத்ரி சித்தர்

**ஆர். கே. முருகேசு சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOREWORD

It gives me great pleasure to write a foreword to the Book "Secret Symbolisation of Gayathri" published by Swami R.K. Murugesu who is very staunch devotee of mine for the past forty years. Though he is engaged in various activities, his mind is always drawn towards Guru Bakthi and he chose to ask my blessing through the foreword of this book. It may not be an exaggeration to say that it unfolds some secrets hitherto unknown to the universe. From a reading of the book one will come to know that Gayathri is the fountain head of all energies in this universe. It is quite fitting that such a person has recently constructed and performed the Kumbabhishekam of Gayathri Temple in Sri Lanka.

I have no doubt in my mind that he is the one who has gone deep into the various aspects of Gayathri manthra and understood the esoteric meaning of the manthra. It gives me very great pleasure to bear testimony to his work. I have no doubt that all the readers who come across his book will join me in wishing him well and invoke the blessings of God to bring success to his humble endeavour to light the lamp of real knowledge in the innerself of the readers through his works.

May God be with him.

Dated : 4-93

Yoga Maharatna

**Dr. Pandit G. Kanniah Yogi**

Athma Yoga Jnana Sabha,

Ambatur, Madras - 53.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மனிதனைத் தெய்வமாக்கவல்ல ஸ்ரீகாயத்ரி மந்திரம்

காயத்ரியைப் பற்றிப் பாரத நாட்டில் பல மொழிகளிலும் எண்ணற்ற நூல்கள் இருக்கின்றன. காயத்ரியைப் பற்றி மாபெரும் வித்துவான்கள், சாஸ்திரிகள் எல்லோரும் அதிக ஆராய்ச்சியின் பேரில் நூல்கள் எழுதியிருக்கிறார்கள். இவைகளில் கிடைக்க முடியாத காயத்ரி பற்றிய பல இரகசிய வித்தைகளின் உண்மையை மகான்கள், பொதுமக்கள் அறியாதவாறு மறைத்து வைத்து அவர்களை அடுத்து நிற்கும் சீடர்களுக்கு மட்டும் நேர்முகமாகக் கற்பித்து வருகின்றனர். வேத மந்திரங்களில் காயத்ரி நான் என்கிறான் கீதையில் கண்ணன். காயத்ரியை விட சக்தி நிறைந்த விலைமதிக்க முடியாத இரத்தினங் கள் போன்ற மந்திரம் மண்ணுலகிலுமில்லை, விண்ணுலகிலுமில்லை. நான்கு வேதங்களின் தாய் காயத்ரி.

***என்னால் துதிக்கப்பட்ட த்விஜர்களைப் பவித்திரம் செய்யவல்ல வேதத் தாயாகிய காயத்ரி ஆயுள், பிராணன், மக்கள், பசுக்கள் புகழ் செல்வம் பிரம்மதேஜஸ் முதலியவைகளைக் கொடுப்பாளாக.***

**(அதர்வ வேதம்19.17.1)**

காயத்ரியை ஜெபித்தாலேயே மனிதன் சூரியனைப் போன்று பிரகாசமுடையவனாகின்றான். காயத்ரி சூரிய சக்தி, அதுவே பிராணசக்தியும் கூட, பிராணனை இரட்சிப்பவள் காயத்ரி. சப்த ரிஷி களும் காயத்ரியை உபாசித்து இந்திரனையே சபிக்கும் தவ ஆற்ற லைப்பெற்றதோடு, பூமண்டலம் தோன்றிய நாள் முதல் இதுவரை சிரஞ்சீவிகளாய் வாழ்ந்து வருகிறார்கள். பிரம்மஹத்தி, திருடு குருபத்தினியைச் சேரல் போன்ற பெரிய பாவங்களும் காயத்ரியை ஸ்மரிப்பதால் நாசமாகி விடுகின்றன.

இத்தகைய சக்தி நிறைந்த, ஜபித்த மாத்திரத்தில் அற்புதமான சித்திகளை அளிக்கவல்ல காயத்ரி மந்திர இரகசியங்களைக் குரு பரம்பரையில் தொடர்பு கொண்டவர்களே அறிவார்களன்றி சாதாரண கல்விமான்கள், சாஸ்திரிகள் அறியமாட்டார்கள். அதனாலேயே அவ்விரகசிய வித்தைக்கு "குப்த வித்தை" மறைக்கப்பட்ட வித்தை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் வந்தது. உண்மையை ஏன் இப்படி மறைத்துவைக்க வேண்டும்? எல்லோரும் அறிய புத்தகங்களில் வெளியிடக்கூடாதா என பக்தர்கள் கேட்கலாம். கூடாது; அவ்வுண்மைகள் வெளியானால் எந்தக் கயவனும் எளிதில் சில சக்திகளைப் பெற்றுவிட முடியும். அதைக்கொண்டு அவன் மனித இனத்திற்கு சொல்லொணாத் துன்பங்களைச் செய்யமுடியும். இதனால் உலக பரிணாமமே பாதிக்கப்படலாம். இதனால் தான் பக்குவமறிந்து தீய வழியில் உபயோகிக்க மாட்டாரென்று தெரிந்தவர்களுக்கு மட்டும் இவ்வுண்மைகளை வெளியிட்டு வருகிறார்கள் குப்த வித்தையின் அதிகாரிகள்.

சாதாரணமாகக் காயத்ரியின் பல சாதனா, உபாசனா முறைகள் மிகவும் எளிதில் அரிய அற்புத சக்திகளைச் செயல்படச் செய்பவையாயுள்ளன. இதை ஒரு கயவன் அறிந்தால் சமூகத்தையே நாசமாக்கிவிட முடியும். அதனால் காயத்ரி சாதனைகள் யாவும் இன்று வரை மறைக்கப்பட்டுத் தகுந்தவர்களுக்கு மட்டும் நேர்முகமாகவும், மானசீகமாகவும் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. காயத்ரி இரகசிய வித்தையைப் போதிக்கும் ஒரு மானச ஆஸ்ரமம் தமிழகத்தில் நீலகிரி பொதிய மலைச்சாரலில் இன்றும் செயற்பட்டு வருகின்றது. ரிஷி பரம்பரையினரே இதை நடத்துகின்றனர். பூர்வ புண்ணிய தவப் பயனாய் இந்த ஆஸ்ரமத்தோடு தொடர்பு கொள்ளும் பாக்கியம் பெற்றவர்களுக்கு காயத்ரி தீக்ஷை கொடுக்கப்பட்டு அவர்கள் நடத்தி வரும் முன்னேற்றத்தை வேறு வழிகளில் அவதானித்து வருகிறார்கள். சிலசமயம் சிலர் அரிய சித்திகளைப் பெற்ற பின் தவறான வழிகளில் உபயோகிப்பதாகத் தெரிந்தால் அவர்களின் சக்தி செயற்படாதவாறு அதிகாரிகள் தம் ஆன்ம சக்தியால் தடுத்து விடுவார்கள்.

காயத்ரிக்கு இவ்வளவு மகத்தான சக்தி உண்டென்பதை நாம் இதுவரை கேள்விப்பட்ட தில்லையே? தினமும் சந்தியாவில் செய்து வருவதுதானே காயத்ரி. இதில் என்ன அப்படிப்பட்ட சக்தி இருக்கப்போகிறது? இருந்தால் இதுவரை சந்தியா செய்யும் எல்லோருமே பல சக்திகளைப் பெற்றிருக்க முடியுமே?

புத்தகங்களைப் படித்து, வித்துவான்கள் சாஸ்திரிகளால் சாதாரணமாகக் கற்பிக்கப்படும் காயத்ரி மந்திரத்தை ஜெபித்தால் சிறப்பாக எந்தச் சக்தியும் வராதுதான். ஏனென்றால், அதைச் சாதாரணமாக ஜெபிப்பவர்களுக்கு அரிய சக்திகள் சித்திக்கக்கூடாது என பிரம்மா, வசிஷ்டர், விஸ்வாமித்திரர் முதலானோர் சாபமிட்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானால் காயத்ரி சாதனை உபாசனை செய்து மனிதன் சித்தி பெற முடியவே முடியாதா? சாபமிட்ட அவர்களே அதை விலக்கி அரிய சக்தி பெறுவதற்கான விமோசனங்களைக் கூறியுள்ளார்கள்.

"காயத்ரி சாபவிமோசனம்" என சில மந்திர சுலோகங்கள் பல நூல்களில் காணப்படுகின்றன. அவற்றைச் சொல்வது தானே சாபவிமோசனம்? இல்லை, அப்படியானால் எல்லோரும் தமக்குத் தாமே சாபவிமோசனம் செய்து கொண்டு உயரிய சித்திகளைப் பெறலாமே, அப்படியானால் சாபம் கொடுத்தும் பயனில்லையே. காயத்ரி உபாசனா சித்தி பெற்ற ஒரு மகானிடம் சாபவிமோசனம் செய்து தீக்ஷை பெற்று உபாசனை செய்யலாம்.

காயத்ரியைப் பொதுவாக த்விஜர்களும் பிராமணர்களும்தான் ஜெபிக்கலாம். மற்றவர்கள் ஜெபித்தால் பாவம் வரும் என்று சிலர் சொல்லுகிறார்களே?

தமிழ்நாட்டில் நெடுங்காலமாகச் சில தவறான நம்பிக்கைகள் மக்கள் மனதில் அகல முடியாதபடி வேரூன்றியுள்ளன. நந்தன், சபரி, கண்ணப்பநாயனார் இன்னும் எத்தனையோ நாயன்மார்கள், ஆழ்வார்கள், பக்தர்கள், யோகிகள், பிராமணர்களாய் இல்லாதிருந்தும் பிராமணர்களைவிடச் சிறந்த தெய்வப் பேற்றைப் பெறவில்லையா? ஸ்ரீராமனுஜர் காயத்ரி பற்றிய இவ்வதந்தியை மறுத்து எல்லோருக்கும் அதை உபதேசிக்கவில்லையா? உண்மை என்னவென்றால் "ஜன்மனா ஜாயதே ஹூத்ர் கர்மணா ஜாயதேத் விஜ:" என்ற கீதா வாக்கியம்தான் சரியானது. பிறப்பில் எல்லோரும் சூத்திரர்களாகத்தான் பிறக்கிறார்கள். பிறகு கர்ம சமஸ்காரங்களால் தான் த்விஜர்களாகிறார்கள். "த்விஜ்" என்ற சொல்லுக்கு இரண்டாவது தடவை பிறத்தல் என்று பொருள். இதையே வள்ளுவரும்:- "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" எனக் கூறியுள்ளார். த்விஜத்வம் யாருக்கும் பிறப்பில் உண்டாவதில்லை தகுந்த சமஸ்காரத்தைப் பெறும்போதுதான் உண்டாகிறது. இதை யாரும் பெறலாம் ஏனெனில் பிறப்பில் எல்லோரும் சூத்திரர்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் காயத்ரியும்

சில காலத்திற்கு முன்புவரை மக்களிடையே ஒரு தவறான நம்பிக்கை நிலவி வந்தது. அதாவது "பெண்களும், சூத்திரர்களும் காயத்ரி மந்திரத்தை ஜெபிக்கலாகாது உபாசனை செய்யக்கூடாது". ஆனால், ராமனுஜர் ஆர்யசமாஜத்தை நிறுவிய ஸ்வாமி தயானந்தர் போன்றவர்களின் முயற்சியால் "சூத்திரர்கள் காயத்ரி உபாசனை செய்யக்கூடாது" என்ற நம்பிக்கை மக்களிடையே விடுபட்டுப் போயிற்று. ஏனென்றால், அவர்கள் ஆயிரக்கணக்கான சூத்திரர்களுக்கு காயத்ரி உபாசனை கற்பித்தார்கள். அதனால் நல்ல பலன்களை அடைந்தார்களே தவிர, எவ்வித கெடுதலையும் அனுபவிக்கவில்லை. இன்று மேல்நாடுகள் பலவற்றில் உள்ள பல சமயங்களைச் சேர்ந்தவர்களும் காயத்ரி உபாசனையின் சிறப்பை அறிந்து பக்தியோடு செய்து வருகிறார்கள். பிராமணர்களா? சூத்திரர்களா? அவர்களில் யாரும் எவ்வித கெடுதலையும் அனுபவிக்கவில்லை. ஆனால், நன்மையை அனுபவித்து வருகிறார்கள். அவ்வப்போது பல மேல்நாட்டவர்கள் வந்து எமது பீடத்தில் காயத்ரி தீக்ஷை பெற்று காயத்ரி உபாசனை செய்து வருகிறார்கள். அவர்கள் மற்ற எவ்வழியிலும் பெற முடியாத அரும்பெரும் பயன்களை அனுபவித்து வருகின்றார்களேயன்றி எவ்வித கெடுதலையும் அனுபவிக்கவில்லை.

இப்போது "பெண்கள் எந்த வருணத்தைச் சேர்ந்தவர்களாயினும் காயத்ரி உபாசனை செய்யலாமா? என்பது பலரின் சந்தேகம். முதலில் இதற்கு விடையாக இதனைச் சொல்கிறோம். எமது பீடத்தில் கணவன்மாருடன் தீக்ஷை பெற்று முறையாகக் காயத்ரி உபாசனை செய்து வருபவர்கள் மட்டுமல்ல, பல பெண்கள் தனியாகவும் காயத்ரி தீக்ஷை பெற்று முறையாக உபாசனை செய்து வருகிறார்கள். அவர்கள் அரும் பெரும் நற்பயன்களை அனுபவித்து வருகிறார்களேயன்றி சிறிதளவும் தீமையை அனுபவிக்கவில்லை. கன்னிப் பெண்கள் சிலர் காயத்ரி உபாசனை செய்து மனம் விரும்பிய மணாளனைப் பெற்று மகிழ்ந்திருக்கிறார்கள். அநாதைகள் போல் யாருடைய உதவியுமில்லாமல் வாழ வழிதெரியாமல் இருந்த பெண்கள் காயத்ரி உபாசனை செய்து எதிர்பாராத நல்லுதவியும், வாழ வழியும் பெற்று நலமடைந்திருக்கிறார்கள். காயத்ரி சக்தி; பெண்கள் அதன் சக்தியின் வடிவங்கள், லக்ஷ்மி, சரஸ்வதி, கௌரி, காமாட்சி, மீனாட்சி போன்ற தெய்வங்கள் சக்தியின் விளக்கங்கள். இந்தச் சக்திகளின் உதவியில்லாமல் பிரம்மா, விஷ்ணு, சிவன் செயலற்றுப் போகிறார்கள். இப்படியிருக்க பிரபஞ்ச சக்தியாகிய காயத்ரியை அந்தச் சக்தியின் வடிவங்களான பெண்கள் செய்யக்கூடாது என்று சொல்வதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளிருக்கிறதா? எப்போதோ சுயநலவாதிகள் கட்டிவிட்ட கட்டுக்கதையை மக்கள் தவறாக நம்பி வந்துவிட்டார்கள். குடும்பத்தில் கணவன் வேலை நிமித்தமாக எந்தத் தெய்வ சாதனையையும் செய்யாமலிருக்கும்போது குடும்பத் தலைவிகள் காயத்ரி உபாசனை செய்துவருவார்களானால் கணவனின் சுகத்தை நாடிச் செய்யப்படும் நோன்புகள், விரதங்களை விட கணவனுக்கு ஆயுள் விருத்தியும், தொழில் மேன்மையும் குழந்தைகளுக்கு நல்ல கல்வியும் குடும்ப நலன்களும் உண்டாகக் கண்டிருக்கின்றோம்.

அகல்யா, அருந்ததி, அனுசூயா, மைத்ரேயி, நளாயினி, வாசுகி, லோபமுத்ரா, மனுவின் மனைவி இடா, பாரத்வாஜ முனிவரின் மகள் கருதாவதி, சாண்டில்ய முனிவரின் மனைவி ஶ்ரீமதி, ஜனக மகாராஜனுடன் சாஸ்த்ரார்தம் செய்த சுலபா, ஸ்வதா என்ற முனிவரின் வடினா, தாரணி, என்ற இரு புதல்விகள், இராவணனின் மனைவி மண்டோதரி முதலானவர்கள் பிரசித்தி பெற்ற காயத்ரி சக்தியால் பெரும் சக்தியைப் பெற்றவர்கள். காட்டில் வாழ்ந்த ரிஷிகளின் பத்தினிகள், புத்திரிகள் அனைவருமே காயத்ரி உபாசனையால் சித்தி பெற்றவர்கள்.

ஆண், பெண் என்ற வேற்றுமை, மாமிச உடலமைப்பின் வேற்றுமையில் தான் இருக்கிறதே தவிர மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆன்மா இவைகளிலில்லை. உடலனுபவத்தைத் தவிர மற்றெல்லா உள்ளுறுப்புகள் அனுபவத்திலும் பெண்கள் எந்த வழியிலும் வேறுபட்டவர்களல்ல. "புத்தி தாசாம் சதுர்குணா" பெண்களுக்கு ஆண்களை விட நான்கு மடங்கு சக்திகள் உண்டு என்று சாத்திரம் சொல்கிறது. ஏனெனில், இயற்கையாகப் பெண்களில் சக்தித் தன்மை ஆண்களைவிட அதிகமாயிருக்கிறது. "பெய்யெனப் பெய்யும் மழை" என்பது பெண்களைப் பற்றிய வழக்குச் சொல்லல்லவா?

பெண்கள் விரும்பினால் தம் கருவிலிருக்கும் குழந்தைகளை எப்படியும் ஆக்கலாம் என்பது உடற்கூற்று வல்லுநர்களின் அனுபவம். பெண் தம் குழந்தைகளைப் புத்திமானாகவோ, மூடனாகவோ கருவிலேயே உருவாக்க முடியும். இதை மெய்ப்பிப்பதுதான் பிரகலாதன் கருவிலிருந்த போது நாராயண மந்திரத்தை உபதேசித்தமையாகும். சத்ரபதி சிவாஜி கருவிலிருக்கும் போது சமர்த்த ராமதாசர் அவருக்கு வீர உபதேசம் செய்தது போன்ற வரலாறுகள்.

ஆகவே நாம் ஆணித்தரமாகச் சொல்கிறோம் கன்னிப் பெண்களோ, கணவனுடன் வாழ்பவர்களோ, கைம் பெண்களோ, யாராயினும் எவ்விதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயக்கமுமின்றி காயத்ரி தீக்ஷை பெற்று, உபாசனை செய்து தம் உலக வாழ்வைச் செம்மைப்படுத்தி பரலோக வாழ்வு செம்மையாயிருக்க அடிகோல முடியும். தீக்ஷை பெறாமல், செய்யும் உபாசனைக்கு அவ்வுலகப் பயன் கிடைக்காது. ஏனெனில் அதற்குச் சாபமுண்டு. தீக்ஷை பெறும்போது சாபம் விலக்கப்பட்டு விடுவதால் ஒவ்வொரு நாள் உபாசனையும் பலன் தரும், குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் தீக்ஷை பெற்றால் ஒருவரில்லாதபோது மற்றவர் உபாசனையைத் தொடரலாம். அதனால் பெண்கள் எவ்வித தயக்கமுமின்றி காயத்ரி தீக்ஷை பெற்று உபாசனை செய்து அரும் பெரும் நன்மைகளைப் பெறுவார்களாக.

## காயத்ரி சாதனையால் என்னென்ன நன்மைகளைப் பெறலாம்

செல்வம், ஆரோக்கியம், ஆயுள், புத்திரப்பேறு, நல்ல விவாகம், வியாபார விருத்தி, உத்தியோக உயர்வு, உடல் வலிமை, மனவலிமை, சொத்து, வீடு முதலான பௌதீக சுகங்கள், பகைமைகள், கலகங்கள், கிரக பீடைகள், தோஷங்கள், கர்மப்பிரபாவங்கள், செய்வினைகள், நோய்கள், குடும்பச் சச்சரவுகள் முதலியன விலக்கல், ராஜ ஹட குண்டலினி, தப ஷட் சக்ரபேதனம் முதலான யோக சித்திகள், அணிமாதி அஷ்ட சித்திகள், சூக்ஷ்ம திருஷ்டி, திவ்விய ஞானம், ஆன்மீகச் சித்திகள் முதலான ஆயிரக்கணக்கான நன்மைகளை காயத்ரி சாதனையால் பெறலாம்.

"காயத்ரி-பிராணன்" பிராணனைக் காப்பாற்றுபவள் காயத்ரி. காயத்ரி மற்ற தெய்வங்களைப் போல் பரலோகத்தில் இருப்பவள் அல்ல. காயத்ரி மந்திரம் மற்ற மந்திரங்களைப் போல் தனியொரு சக்தியை விளிப்பிப்பதல்ல. மண்ணுலகுக்கு அனைத்தையும் அளித்து, காத்து, அழிக்கும் சூரியனிலிருந்து பரவும் பிராண சக்திதான் காயத்ரி. காயத்ரி ஜெபத்தால் சூரியசக்தி கவரப்படுகிறது. காயத்ரி உபாசனை யால், சாதனையால் சகல சித்திகளும் உண்டாகின்றன. ஏனென்றால்,

"பிரஹ்ம, விஷ்ணு ஸ்வாத்மிகா"

பிரம்மா, விஷ்ணு இவர்களின் ஆத்மாவாக இருப்பவள் காயத்ரி என உபநிடதம் கூறுகிறது. உண்மையில் எல்லாத் தேவ சக்திகளும் மண்ணுலகிற்குச் சூரிய கிரணங்கள் மூலமாகத்தான் வருகின்றன. சூரியன் இல்லையானால் உலகமும், மற்ற கிரகங்களும் இருக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணன் காயத்ரி மந்திரமாக, காயத்ரி மந்திரத்தையே, சுவாச நடையாக இரண்டறக்கலக்கச் செய்வது இச்சாதனையால் காயத்ரி ஜெபத்தின் முழுப்பயனும் உண்டாகிறது.

ஆகையால் சன்மார்க்கசீலர்கள் தகுந்த குருவையண்டி முறைப்படி சாப விமோசனம் செய்வித்து தீக்ஷை பெற்றுத் தொடர்ந்து சாதனை செய்து சக்தி பெற்ற சித்த புருஷர்களாகி மண்ணுலக மக்கள் மாண்புற வழிகாட்டும் மகான்களாக வாழ்வார்களாக.

சுத்தமானவனோ, அசுத்தமானவனோ, எப்படி எப்படி எல்லாமோ இருப்பவனோ, அறிவு கொண்டு காயத்ரியை ஜெபித்தால் பல பாவங்களை செய்தவனானாலும், பாவங்களுடன் புண்ணியங்களைச் செய்பவனானாலும், நல்ல ஒழுக்கம் உள்ளவனானாலும், கெட்ட ஒழுக்கமுள்ளவனானாலும் காயத்ரியின் மகிமையை உணர்ந்து அறிந்து ஜெபிப்பானானால் அவன் பாவமெல்லாம் ஒழிந்து பரிசுத்தமாவான்.

காயத்ரி ஜெபத்தால் பாவங்கள் விலகும். சுவர்க்க சுகம் கிடைக்கும். மோக்ஷம், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பேறுகளும் புருடார்த்தங்களும் கிடைக்கும்.

இவ்வுலகிலும், பரவுலகிலும் தினசரி சமயங்களில் தேவைப்படும் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் தவத்தை வளர்க்க காயத்ரியை விட மேலானதொன்றுமில்லை.

**(காயத்ரீ மந்திரம்)**

காயத்ரியை ஜெபிப்பது சகல வேதங்களின் சாரத்தை ஜெபிப்பதாகும். அதனால் பிரம்மா முதலான தேவர்களும் சந்தியா காலத்தில் காயத்ரியைத் தியானித்து ஜெபிக்கிறார்கள்.

**(தேவீ பாகவதம்)**

மூன்று வருடங்கள் தவறாமல் காயத்ரியை ஜெபித்து வருபவன் வாயு போல சுதந்திரமாக இயங்கி பிரம்மத்தை அடைவான்.

**(மனுஸ் மிருதி)**

ப்ரம்மஹத்தி:-பிராம்மணனை, ப்ரம்மஞானியைக் கொலை செய்தல், குருபத்தினியைச் சேரல் போன்ற பாவங்களும் காயத்ரி ஜெபத்தால் விரைவில் அழிந்து போகும்.

**(பத்ம புராணம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரி மந்திரத்தை ஆயிரம் முறை ஜெபித்தால் பிரளயம், அக்கினி, மஹாமாரி முதலிய உபாதைகளிலிருந்து காப்பாற்றுவாள். லக்ஷம் முறை ஜெபித்தால் பெரிய பாவங்களெல்லாம் விலகிப் போகும். கோடி ஜெபம் செய்தால் விரும்பியதெல்லாம் பெறமுடியும்.

**(பலிஸ்ய புராணம்)**

காயத்ரியை அறிந்தவனே பிராமணனாவான். அதை அறியாதவன் தர்ம சாஸ்திரங்களிலும், வேதங்களிலும் கரை கண்டிருந்தாலும் சூத்திரனேயாவான்.

**(தேவீ பாகவதம்)**

என்னால் துதிக்கப்பட்ட த்விஜர்களைப் பவித்ரம் செய்யவல்ல வேதத் தாயாகிய காயத்ரி ஆயுள், ப்ராணன், மக்கள், பசுக்கள், புகழ், செல்வம், ப்ரம்ம தேஜஸ் முதலியவைகளைக் கொடுப்பாளாக.

**(அதர்வ வேதம்)**

பாவங்களை அழிப்பதில் காயத்ரிக்குச் சமமான மந்திரம் வேறெதுவும் இல்லை. அதனால் பிரணவ மஹாவ்யா ஹ்ருதிகளுடன் காயத்ரி மந்திரத்தை ஜெபி.

**(சம்வர்த்தஸ்ம்ருதி)**

நான்கு வேதங்களையும் அதனதன் அங்கங்களுடன் தராசின் ஒரு தட்டில் வைத்தால் அதற்குச் சமமாக காயத்ரி ஒன்றை மட்டும் மறுதட்டில் வைத்தால் எடை சரியாக இருக்கும்.

காயத்ரி வேதங்களின் தாய், காயத்ரி சகல பாவங்களையும் போக்குபவள், காயத்ரியைப் போல் பவித்ரம் செய்யவல்ல மந்திரம் மண்ணுலகிலுமில்லை, விண்ணுலகிலுமில்லை.

கங்கைக்குச் சமமான தீர்த்தமில்லை. கேசவனுக்குச் சமனான தேவரில்லை. காயத்ரிக்கு மேலான ஜபம் இருந்ததுமில்லை. இனிமேலும் இருக்கப்போவதுமில்லை.

**(யாக்ஞயவல்கியர்)**

எல்லா ஜப சூக்தங்களையும் ரிக், யஜுர், சாம மந்திரங்களை யும் ஏகாஷரங்களையும் விட காயத்ரி ஜபம் மிக மேலானது.

**(பராசரஸ்ம்ருதி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுலகிலும், விண்ணுலகிலும் காயத்ரியைப் போல் சுத்தம் செய்ய வல்லது ஒன்றுமில்லை. நரகத்தில் வீழ்பவர்களைக் கை கொடுத்துக் கரையேற்றுபவள் காயத்ரி.

**(ஸங்கஸ்மிருதி)**

ஒரு காலத்தில் பிரம்ம தேவன் காயத்ரியையும், வேதங்களையும், பரீட்சித்துப் பார்த்ததில் நான்கு வேதங்களுக்குச் சமமாக காயத்ரி ஒன்றே இருக்கக்கண்டான்.

**(பராசரஸ்மிருதி)**

அக்காலத்தில் வாழ்ந்த மகரிஷிகள் தாம் காயத்ரியைப் புகழ்ந்தார்கள் என்றில்லை. இக்காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள் பலரும் காயத்ரியின் சிறப்பை அறிந்து உபதேசித்திருக்கிறார்கள். அவர்களில் சிலரின் கருத்தை ஆராய்வோம்.

**மகாத்மா காந்தி**

காயத்ரி மந்திரத்தின் ஜபம் நோயாளிகளைக் குணப்படுத்தவும், ஆத்மாவை முன்னேறச் செய்யவும் பயன்படுகிறது. திடசித்தமாகச் செய்யப்படும் காயத்ரி ஜெபம் ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றும் திறமை பெறுகிறது.

**லோகமான்ய திலகர்**

பாரத மக்களின் அடிமைத்தனம் அரசியல் போராட்டங்களால் மட்டும் வெற்றியடையாது. பாரத மக்களின் ஆத்மாவில் ஒளி பிறக்க வேண்டும். இதற்குக் காயத்ரி ஜெபம் உதவி செய்யும்.

**மதன் மோகன் மாளவியா**

ரிஷிகள் நமக்குக் கொடுத்த அரிய இரத்தினங்களிலும், விலைமதிக்க முடியாதது காயத்ரி. காயத்ரியால் அறிவு சுத்தமாகிறது. ஆத்மாவில் ஈஸ்வரஜோதி உதயமாகிறது.

**ரவீந்திரநாத் தாகூர்**

பாரத மக்களை விரைவில் விழிக்கச் செய்யும் சக்தி காயத்ரி மந்திரத்துக்கிருக்கிறது. இதை ஜபிப்பவர்கள் கருத்து வேற்றுமை, பகைமை மனப்பான்மை கொள்ளமாட்டார்கள்.

**யோகி அரவிந்த கோஸ்**

மனிதனை பூரண வாழ்வுடையவனாகச் செய்யும் சக்தி காயத்ரிக்கு இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

கடினமான தெய்வ சாதனைகளை மக்கள் செய்ய வேண்டிய தேவையில்லை. சிறியதான காயத்ரி ஜெபத்தைச் செய்து பாருங்கள் இதனாலேயே சகல சித்திகளும் உண்டாகி விடும். சக்தி நிறைந்த சிறிய மந்திரம் காயத்ரி.

### சுவாமி விவேகானந்தர்

காயத்ரி நல்லறிவைக் கொடுக்கும் சாதனம். காயத்ரி ஜபத்தால் நல்லறிவைப் பெறுபவன் வாழ்க்கையில் சிறந்ததைப் பெற்றவனாவான். மந்திரங்களில் இரத்தினம் போன்றது காயத்ரி.

### சங்கராச்சார்ய சுவாமிகள்

காயத்ரியின் மகிமையைச் சொல்வது சாதாரண மக்களால் இயலாத காரியம். ஏனெனில் காயத்ரியால் அறிவு சுத்தமாகிறது. இதற்கு உலகில் வேறெந்த வழியும் கிடையாது.

### சுவாமி ராமதீர்த்தர்

காயத்ரி அறிவைக் காம ஆசையிலிருந்து ராமனின் ஆசையில் செலுத்த வல்லதாகும். காயத்ரியால் சுத்தமான அறிவைப் பெற்றவனே ராமனைக் கண்டருள் பெற்றுய்ய முடியும்.

## பிரபஞ்சம் காயத்ரிமயம்

நீங்கள் எந்தப் பெயரில் எந்த உருவிலோ, அரூபத்திலோ எந்தக் குணங்களைக் கற்பித்து கடவுளை, ஆண்டவனை, இறை வனை, இப்பிரபஞ்சத்தைப் படைத்தவனை நம்பினாலும், வழிபட்டாலும் அவனருளைப் பெற என்ன வழிபாட்டு முறையை மேற்கொண்டிருந்தா லும் அவ்வளவும் இப்பிரபஞ்சத்துக்குட்பட்டது தானே? சுவர்க்கம், நரகம், பரலோகம், இறைவனின் அரசாங்கம் எல்லாமே இப்பிரபஞ்சத்துக் குட்பட்டவைதானே? நான் சொல்லும் ஒரு பேருண்மையை அறியுங்கள். காயத்ரி என்றால் பிரபஞ்சம் என்று பொருள். ஸ்தூல, சூக்ஷம பிரபஞ்ச அமைப்புகளும், அவைகளில் உள்ள சேதன, அசேதனப் பொருள்கள னைத்தும் காயத்ரியின் திரிபுகளே. காயத்ரிதான் ஸ்வர்க்கம், காயத்ரி தான் நரகம், காயத்ரிதான் மோக்ஷலோகம், காயத்ரிதான் இறை சாம்ராஜ் யம், காயத்ரிதான் சூரிய சந்திர, நட்சத்திரங்கள், காயத்ரிதான் கடல், நீர், மண், நெருப்பு, காற்று, ஆகாயம், காயத்ரிதான் புல்பூண்டுகள், காயத்ரிதான் செடி, கொடி, மரங்கள், காயத்ரிதான் புழு, பூச்சிகள், பறவைகள், விலங்குகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள், தேவர்கள், அசுரர்கள், பேய்கள், பிசாசுகள், எல்லாம் காயத்ரிதான் என்றால் வியப்பாகவும், நம்பமுடியாததாகவும் இருக்கிறதா? ஒரு பேருண்மையைப் புரிந்துகொண்டால் இவ்வுண்மையை ஒப்புக்கொள்ளலாம்.

பிரபஞ்சம் எண்ணற்ற பொருள்களாலானவையானாலும் அவை எல்லாமே ஒரே மூலப் பொருளிலிருந்து உண்டானவையே. அணு விஞ்ஞானக் கருத்துப்படி ஆயிரமாயிரம் வேற்றுமைப்பட்ட பொருள்களெல்லாம் அணுக்களின் திரிபுகள்தாமே. ஒரே அணுவின் வெவ்வேறு வடிவ அமைப்பில் வெவ்வேறு பொருள்கள் உண்டாகின்றனவோ அப்படி "பிரக்ருதி" என்ற மூலப்பொருளிலிருந்தே இப்பிரபஞ்சம் முழுவதும் தோன்றியது என்கிறோம். பிரக்ருதிக்கு குணமில்லை, வடிவமில்லை. அதிலிருந்தே ஸ்தூல, சூக்ஷம பிரபஞ்சப் பொருள்களெல்லாம் உண்டாயிற்று. அந்தப் பிரக்ருதிதான் காயத்ரி என்றால் பிரபஞ்சமெல்லாம் காயத்ரியின் வடிவம்தான் என்பதை ஒப்புக் கொள்வோமல்லவா? உருவமும் குணமற்ற பிரக்ருதியிலிருந்து கணக்கிலடங்காத பொருள்கள் எப்படி உருவாயிற்று? அணுக்கள் கூடி எப்படிப் பல பொருள்களாகின்றன என்பது இன்று விஞ்ஞானம் கண்டறிந்த உண்மை. இதேபோல் குணமும், உருவமுமற்ற பிரக்ருதியில் நாதம், ஒலி, அலைபோல் பல்வேறு பொருள்களை உண்டாக்குகின்றன. காயத்ரி மந்திரத்தின் 24 ஒலிகள் தான் அந்தப் பிரக்ருதியில் பிரபஞ்சத்தை உண்டாக்கிய நாதங்கள், காயத்ரி மந்திரத்தின் தத் என்ற மந்திர அலை செயற்படும்போது பிரக்ருதியில் குறித்த சில சேதன, அசேதன வடிவங்கள் உண்டாகின்றன. இப்படியே காயத்ரி மந்திரத்தின் 24 எழுத்தலைகளிலிருந்தே சூக்ஷம ஸ்தூல பிரபஞ்சத்தின் சேதன, அசேதனங்கள் அனைத்தும் உண்டாயின. பிரபஞ்சம் காயத்ரி மந்திர சப்த அலைகளின் வடிவம்.

பிரபஞ்சத்தின் எந்தப் பொருளை எடுத்தாலும் அது காயத்ரி மந்திரத்தின் இன்ன சப்தத்தின் வடிவம் என்று சொல்லிவிடலாம். பிரபஞ்சத்தில் முக்கியமாகச் செயல்படும் 24 சக்தி தாரைகள் காயத்ரி மந்திரத்தின் 24 அட்சர ஒலிகளின் சக்தியே. காயத்ரியின் 24 அட்சர சக்திகளைப் பற்றி அடுத்த உபதேசத்தில் விளக்கப்பட்டுள்ளது. நீங்கள் எந்த சமயத்தைச் சேர்ந்தவராயினும் கடவுளை எப்படி வழிபடுபவராயினும் காயத்திரியைத்தான் வழிபடுகிறீர்கள். அவ்வாறு இல்லை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் பிரிவினை மனப்பான்மையின் விளைவே தவிர உண்மையில்லை. மனிதனின் கற்பனையிற்தான் வேற்றுமையிருக் கிறது. ஆகவே நீங்கள் எம்மதத்தைச் சேர்ந்தவராயினும், எந்த நம்பிக்கை கொண்டவராயினும் காயத்ரி சாதனையைச் செய்து வருவது நல்லது. ஏனென்றால் மற்றவைகள் உண்மையை நேராக அல்லாமல் சுற்றி வளைத்துக் காட்டுகின்றன. காயத்ரி சாதனை, பிரபஞ்ச மனித உண்மையை நேருக்கு நேர் காட்டுகிறது.

என்னிடம் பல மதத்தவர்கள் காயத்ரி தீக்ஷை பெற்று உபாசனை செய்து வருகிறார்கள். அவர்களெல்லோருமே அதனால் பெரும் பயன்பெற்று வருகிறோம் என்று கூறுகிறார்கள். பிற சமயத்தவர்களே இப்படிக் கூறுகிறார்களென்றால் இந்து சமயத்தின் பல பிரிவுகளை நம்புபவர்கள் பல தெய்வ வழிபாடுகள் மூலம் எவ்விதத் தடையும் இல்லாமல் செய்து பயனடையலாமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? நீங்கள் யாரிடம் எந்தத் தெய்வத்தின் உபாசனைத் தீட்சை பெற்று உபாசனை செய்து வருபவராயினும் காயத்ரி தீக்ஷை பெற்று காயத்ரி உபாசனை செய்து வருவது அறிவுடைமை என்று சொல்லவும் வேண்டுமா?

***அருள்***

## தெய்வ வசியம்

"தெய்வம் மந்த்ராதீனம்" என்பது அனுபவ வாக்கியம். அதாவது எந்தத் தெய்வமும் மந்திரத்துக்குக் கட்டுப்படும். காளி, முனி, பேய், பிசாசுகள் முதல் ராம, கிருஷ்ண, சிவ, விஷ்ணு, லக்ஷ்மி, சரஸ்வதி முதலிய எல்லாத் தெய்வங்களையும் தகுந்த மந்திர சாதனைகளால் மனிதர் கட்டுப்படுத்தி வசப்படுத்திப் பயன்படுத்தி வந்தனர். அசுரர்கள் மந்திரசக்தியால் தேவர்களைக் கட்டுப்படுத்தினார்கள். இராவணன் மந்திர சக்தியால் கைலயங்கிரியை ஆட்டி வைத்ததுடன் காட்சி தர மறுத்த சிவனைப் பலவந்தமாகக் காட்சி தரச் செய்தான். இதே போன்ற சம்பவங்கள் மேலை நாட்டு நாகரிகங்களிலும் காணப்படுகின் றன. எகிப்திய, ரோமானிய, உருது மொழிகளிலும் சில சக்தி வாய்ந்த மந்திரங்கள் இருந்தன. அவற்றைக் கொண்டு சாதகர்கள் தெய்வசக்தி களைக் கவர்ந்து பயன்படுத்தி வந்தார்கள்.

சாதகர்களே! நீங்கள் கேட்டிராத ஒரு பெரும் இரகசியத்தைச் சொல்கிறேன். ஒவ்வொரு தெய்வத்தையும் வசப்படுத்த தனித்தனி மந்திரங்கள் உண்டு. அந்தந்த மந்திரங்களைக் கொண்டுதான் அந்தந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தை வசப்படுத்த வேண்டும். ஆனால், காயத்ரி மந்திரம் ஒன்றால் எல்லாத் தெய்வங்களையும் வசப்படுத்தலாம். ஏனென்றால் ஒவ்வொரு தெய்வமும் பிரபஞ்சத்தின் ஒரு அமைப்புக்கதிபதி. லக்ஷ்மி செல்வத்தை அளிப்பாள். சரஸ்வதி வித்தையை அளிப்பாள். விஷ்ணு போக பாக்கியங்களைக் கொடுப் பான். சிவன் ஞானத்தைக் கொடுப்பான், ஒவ்வொருவரையும் வசப்ப டுத்த தனித்தனி மந்திரங்கள் உண்டு. காயத்ரி பிரபஞ்ச அமைப்பு. அவளில் எல்லாத் தெய்வங்களும் அடங்கியிருக்கின்றன. அவளின் சக்தி பிரபஞ்ச மூலசக்தி. அந்தச் சக்தியின் திரிபுகளே மற்றச் சக்திகளா தலால் எல்லாச் சக்திகளும் தேவ, தேவியர்களும் அவளில் ஒடுக்கம்.

நீங்கள் இதுவரை எந்தக் காரிய வெற்றிக்காக எந்தத் தெய்வத்தை, எந்த மந்திரத்தால், தோத்திரத்தால் வழிபட்டு வந்திருந்தா லும் காயத்ரி சாதனையை மேற்கொண்டீர்களானால் அந்த வெற்றி மிக விரைவில் உங்களுக்குக் கிடைக்கும். இதற்காக நீங்கள் உங்கள் வழிபாட்டு முறையை விட்டு விட்டாலும் தவறொன்றுமில்லை. ஆனால், பலருக்கு இப்படிச் செய்வது ஏதோ தவறாகப்படும். அத்தகையவர்கள் தம் வழக்கமான உபாசனையைச் செய்துகொண்டே காயத்ரி சாதனை யைச் செய்துவரலாம். இதனால் இதுவரை தாமதப்பட்டு வந்த காரிய வெற்றி சிலநாட்களில் ஆச்சரியமான முறையில் நிறைவேறுவதைக் கண்டு அகமகிழ்வார்கள்.

காயத்ரி சாதனையில் ஒவ்வொரு காரிய சித்திக்கும் காயத்ரி சாதனை எப்படிச் செய்யப்படவேண்டுமென்பது விளக்கப்பட்டு வரும். அதற்கெல்லாம் அடிப்படையாக முன்பு சொன்ன காயத்ரி பொது உபாசனையை நீங்கள் முறையாகச் செய்து வரவேண்டும். மனதில் எவ்வித சந்தேகமுமில்லாமல் காயத்ரி உபாசனை செய்து வாருங்கள். நீங்கள் இதுவரை முறையாகக் காயத்ரி தீக்ஷை பெற்று உபாசனையைச் செய்து வருபவராயில்லாமல் காயத்ரியைப்பற்றி உண்மைகளை மட்டும் அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் இந்தப் பாடங்களைப் படித்து வருபவரானால் ஒரு சமயம் இதுவரை உங்களுக்குக் காயத்ரி மந்திரம் தெரியாமல் இருக்கலாம். அதனால் இப்போது காயத்ரி மந்திரத்தை வட மொழியிலும், தமிழிலும் விளக்குகிறோம்.

**ஓம் பூர் புவ ஸ்வஹ**
**தத் ஸ்விதுர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோநஹ ப்ரசோதயாத்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழி தெரியாமல் ஆங்கிலம் தெரிந்தவராயிருந்தால் உச்சரிப்பைச் சற்றுச் புரிந்துகொள்ள ஆங்கிலத்தில் மந்திரத்தை எழுதுகிறோம்.

**Om Bhoor Bhuvaha Swaha**
**Thath Savithur Varenyam**
**Bhargo Devasya Dheemahi**
**Dhiyo Yo Naha Prochodayath.**

இவ்வளவுக்கும் மேல் "உச்சரிப்புச் சரியில்லாவிட்டால் தீமை விளையுமே என்று கலக்கமடைந்து விடாதீர்கள். உச்சரிப்புச் சரியாக இல்லாவிட்டால் கிடைக்கும் பலன் சற்றுத் தாமதமாகக் கிடைக்கலாம் அன்றி எவ்வித கெடுதலும் நேர்ந்து விடாது." எல்லோரும் காயத்ரி மந்திரத்தின் பயனை அடையக்கூடாது என்று கருதிய சில கயவர்களின் பயமுறுத்தல்களுக்கு நீங்கள் ஏமாந்து போய் விடாதீர்கள். எந்த மந்திரத்தைச் சரியாக உச்சரிக்காவிட்டாலும் அதனால் கிடைக்கக்கூடிய நன்மை தாமதப்படலாம். குறையலாமன்றி எவ்வித கெடுதலும் நேராது. இராமனுஜர் மிகவும் பிற்பட்டவர்களுக்கும், படிப்பில்லாதவர்களுக்கும் காயத்ரி மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தார். ஆரிய சமாஜ ஸ்தாபகர் ரிஷி தயானந்தர் எல்லோருக்கும் காயத்ரி மந்திரத்தை உபதேசித்தார். எல்லோரும் கெடுதல்களை அனுபவித்தார்களா? இல்லை. மெதுவாக நன்மைகளையே அடைந்தார்கள். அதனால் உச்சரிப்பில் தவறுநேர்ந்து விட்டால் என்ன செய்வது என்று சிறிதும் அச்சமில்லாமல் காயத்ரி மந்திரத்தை உச்சரித்துப் பயனடைந்து வாருங்கள்.

**அருள்!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரியின் அட்சர தெய்வங்களும் பயன்களும்

காயத்ரி மந்திரம் 24 எழுத்துக்களைக் கொண்டுள்ளது. இந்த ஒவ்வொரு எழுத்தும் பிரபஞ்சத்தின் ஒரு அமைப்பையும், மனித (பிராணிகளின்) உடலமைப்பின் தத்துவத்தையும் விளக்குகிறதென முன்பு கண்டோம். 24 எழுத்துக்களுக்குரிய தேவதைகளையும் அவைகளின் காயத்ரி சக்தியை விழிப்பிப்பதால் பெறக்கூடிய நன்மைகளையும் ஆராய்வோம்.

01. **கணேசன்:-** இதன் காயத்ரி சக்தியை விழிப்படையச் செய்வதால் கஷ்டமான காரியங்கள் வெற்றியடையும். இடையூறுகள் மறையும். அறிவு வளரும். அடுத்து வருபவைகளுக்கும் இதன் காயத்ரி சக்தியை விழிப்பிப்பதாலாகும் பயன்கள் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

02. **நரசிம்மன்:-** வீரம், பராக்ரமம், பகைமை, அழிவு விபத்துகளில் இருந்து காப்பாற்றப்படல்.

03. **விஷ்ணு:-** நல்ல வாழ்வு, தன் நன்னிலை கெடாமலிருத்தல்.

04. **சிவன்:-** தனக்குத் தேவையில்லாமல் தன்னில் இருக்கும் குற்றம், குறைகள் அழிதல், ஆன்ம ஞானம் பெறும் இச்சை அதிகமாதல்.

05. **கிருஷ்ணன்:-** எந்தக் காரியத்தையும் திறமையுடன் செய்தல், கர்ம யோகியாதல், அழகு பெறல்.

06. **ராதை:-** அன்பு வளர்ச்சி, வெறுப்புத்தன்மை மறைதல்.

07. **லக்ஷ்மி:-** செல்வம், புகழ், போக பாக்கியங்கள் சேரல்.

08. **அக்கினி:-** சக்தி, ஒளி, தேஜஸ், பலரின் புகழ்ச்சிக்கு ஆளாதல்

09. **இந்திரன்:-** பேய், பிசாசு, சேஷ்டை பற்றாமை, திருடர் பயமில்லாமை.

10. **சரஸ்வதி:-** நல்லறிவு வளர்ச்சி, கல்வியின் மேன்மை, சூக்ஷ்ம திருஷ்டி முதலிய சாதனைகளில் வெற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **துர்க்கா:-** தொல்லைகள், சச்சரவுகள் விலகல், கெட்டவர்களை அடக்குதல், கர்வம் அடங்குதல்.

12. **ஆஞ்சனேயர்:-** கடமையை எவ்வித எதிர்ப்புக்குமிடையில் செய்து முடித்தல். நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருத்தல், பிரம்மச்சர்யம் மேற்கொள்ளல்.

13. **பூமாதேவி:-** பொறுமை, மன்னிப்புத்தன்மை.

14. **சூரியன்:-** நீண்ட ஆயுள், ஆரோக்கியம், உடல் சுத்தி.

15. **ராமன்:-** எத்தகைய துன்பங்களையும் சகிக்கும் தன்மை, நட்பு, அறம் பாலித்தல், மரியாதை.

16. **சீதா:-**பவித்ரம், கலக்கமில்லாமை, பணிவு மனப்பான்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை.

17. **சந்திரன்:-**தொல்லைகள் மாறல், கோபம், ஆத்திரம் முதலியவை அடங்கிப்போதல்.

18. **யமன்:-**நேரத்தை நல்லவிதமாய் பயன்படுத்தல், மரணத்துக்கு அஞ்சாமை, எப்போதும் சோம்பலின்றிச் சுறுசுறுப்பாயிருத்தல்.

19. **பிரம்மா:-**புதுமையைச் செய்யும் அறிவு, பயிர்த்தொழில் செழித்தல், தாவரங்கள் நன்கு வளர்தல்.

20. **வருணன்:-**கலைகளில் பற்று, எளிமையாயிருத்தல், தயை, கவி செய்யும் திறமை, வளர்தல், ஏழை எளியவர்கள் பால் இரக்கம் கொள்ளுதல்.

21. **நாராயணன்:-**பிறருக்கு நல்வழி காட்டும் தன்மை, சீரிய ஒழுக்கம், உயர்ந்த எண்ணம், காரியத்தையும் திறமையுடன் செய்தல்.

22. **ஹயக்ரீவன்:-**தைரியம், வீரம், உற்சாகம், துன்பங்களை அஞ்சாமல் அவற்றை எதிர்த்துப் போக்க முயற்சித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. **அன்னம்:-** பரந்த புகழ், எப்போதும் சந்தோசமாயிருக்கும் தன்மை, முக்காலமறியும் தன்மை, பொய் -மெய்களைப் பகுத்தறிதல், நல்லோர் நேசம், நல்ல உணவுப்பழக்கம்.

24. **துளசி:-** மக்களுக்குச் சேவை செய்வதில் ஆர்வம், எப்போதும் உண்மையைப் பேசல், பிறரின் துன்பங்களைப் போக்கும் முயற்சி.

சாதகரே! இப்போது சொல்லப்பட்ட குணங்களில் ஏதாவ தொன்று நமக்குள் வரவேண்டுமானால், என்ன செய்ய வேண்டும். அந்தக் குணத்துக்குரிய தெய்வத்துடன் காயத்ரியைச் சேர்த்து ஜெபம் செய்து வரவேண்டும். உதாரணமாக நமக்கு எந்தக்காரியத்தையும் திறம்பட நடத்தும் பண்பு வரவேண்டுமானால், இந்தக் குணத்துக்கு உரித்தான நாராயண நாமத்துடன் நாராயண காயத்ரியைச் சேர்த்து ஜெபம் செய்து வரவேண்டும். முக்கிய காயத்ரி சாதனை செய்து சோதனை யில் வெற்றியடைந்திருந்தால் இந்த ஜபங்களைப் பல நாட்களுக்குச் செய்ய வேண்டியதில்லை. வேண்டுமான போது இந்த ஜெபத்தைச் செய்தால்போதும். அதன் தன்மை நம்மில் வந்துவிடும். அடுத்த பாடத்தில் இந்த 24 தெய்வ காயத்ரியை விளக்குவோம்.

**அருள்!!!!**

## தெய்வ காயத்ரிகள்

**கணேச காயத்ரி**

ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே,. வக்ர துண்டாய தீமஹி, தன்னோ புத்தி: ப்ரசோதயாத்.

**நரசிம்ம காயத்ரி**

ஓம் உக்ர ந்ருசிம்ஹாய வித்மஹே வஜ்ர நகாய தீமஹி, தன்னோ ந்ருசிம்ஹ: ப்ரசோதயாத்.

**விஷ்ணு காயத்ரி**

ஓம் நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி, தன்னோ விஷ்ணு: ப்ரசோதயாத்.

**சிவ காயத்ரி**

ஓம் பஞ்ச வக்த்ராய வித்மஹே,. மஹாதேவாய தீமஹி, தன்னோ ருத்ர: ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராதா காயத்ரி**

ஓம் வருஷபானுஜாய வித்மஹே,. க்ருஷ்ண ப்ரியாயை தீமஹி, தன்னோ ராதா: ப்ரசோதயாத்.

**கிருஷ்ண காயத்ரி**

ஓம் தேவகீ நந்தனாய வித்மஹே,. வாஸுதேவாய தீமஹி, தன்னோ க்ருஷ்ண: ப்ரசோதயாத்.

**லக்ஷ்மி காயத்ரி**

ஓம் மஹாலக்ஷ்மியை வித்மஹே,. விஷ்ணு ப்ரியாயை தீமஹி, தன்னோ லக்ஷ்மீ: ப்ரசோதயாத்.

**அக்னி காயத்ரி**

ஓம் மஹாஜ்வாலாய வித்மஹே,. அக்னி தேவாய தீமஹி, தன்னோ அக்னி: ப்ரசோதயாத்.

**இந்த்ர காயத்ரி**

ஓம் ஸஹஸ்ர நேத்ராய வித்மஹே,. வஜ்ர ஹஸ்தாயதீமஹி, தன்னோ இந்த்ர: ப்ரசோதயாத்.

**சரஸ்வதி காயத்ரி**

ஓம் ஸரஸ்வத்யை வித்மஹே,. ப்ரஹம பத்னியை தீமஹி, தன்னோ தேவீ: ப்ரசோதயாத்.

**துர்கா காயத்ரி**

ஓம் கிரிஜாயை வித்மஹே,. சிவ ப்ரியாயை தீமஹி, தன்னோ துர்கா: ப்ரசோதயாத்.

**அனுமன் காயத்ரி**

ஓம் அஞ்சனீ சுதாய வித்மஹே,. வாயு புத்ராய தீமஹி, தன்னோ மாருதி: ப்ரசோதயாத்.

**பூமா தேவி காயத்ரி**

ஓம் ப்ருத்வீ தேவ்யை வித்மஹே,. ஸஹஸ்ர மூர்த்யை தீமஹி, தன்னோ ப்ருத்வீ: ப்ரசோதயாத்.

**சூர்ய காயத்ரி**

ஓம் பாஸ்கராய வித்மஹே,. திவாகராய தீமஹி, தன்னோ ஸுர்ய: ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராம காயத்ரி**

ஓம் தசரதாத்மஜாய வித்மஹே,. ஸீதா வல்லபாயை தீமஹி, தன்னோ ஸுர்ய: ப்ரசோதயாத்.

**சீதா காயத்ரி**

ஓம் ஜனக நந்தின்யை வித்மஹே,. பூமிஜாயை தீமஹி, தன்னோ ஸீதா: ப்ரசோதயாத்.

**சந்த்ர காயத்ரி**

ஓம் க்ஷீர புத்ராய வித்மஹே, அம்ருத தத்வாய தீமஹி, தன்னோ சந்த்ர: ப்ரசோதயாத்.

**யம காயத்ரி**

ஓம் ஸுர்யபுத்ராய வித்மஹே,. மஹாகாலாய தீமஹி, தன்னோ யம: ப்ரசோதயாத்.

**ப்ரஹ்ம காயத்ரி**

ஓம் சதுர்முகாய வித்மஹே, ஹன்ஸாருடாய தீமஹி, தன்னோ ப்ரஹ்ம: ப்ரசோதயாத்.

**வருண காயத்ரி**

ஓம் ஜல விந்தாய வித்மஹே, நீல புருஷாய தீமஹி, தன்னோ வருண: ப்ரசோதயாத்.

**நாராயண காயத்ரி**

ஓம் நாராயணாய வித்மஹே, வாஸுதேவாய தீமஹி, தன்னோ நாராயண: ப்ரசோதயாத்.

**ஹயக்ரீவ காயத்ரி**

ஓம் வாணீஸ்வராய வித்மஹே, ஹயக்ரீவாய தீமஹி, தன்னோ ஹன்ச: ப்ரசோதயாத்.

**ஹன்ச காயத்ரி**

ஓம் பரமஹன்ஸாய வித்மஹே, மஹா ஹன்சாயா தீமஹி, தன்னோ ஹன்ச: ப்ரசோதயாத்.

**துளசி காயத்ரி**

ஓம் ஸ்ரீ துளஸ்யை வித்மஹே, விஷ்ணு ப்ரியாயை தீமஹி, தன்னோ வ்ருந்தா: ப்ரசோதயாத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகரே! சென்ற உபதேசத்திலும், இந்த உபதேசத்தில் நாம் சொல்லிய விளக்கங்களின் தத்துவமும், பயனும் பிரபஞ்சத்தில் நூற்றுக்கணக்கான சக்திகள் செயல்படுகின்றன. என்றாலும் அவையெல்லாம் ஒரே மூலசக்தியின் திரிபுகள் தாம். அந்த மூலசக்தியை நாம் காயத்ரி என்று சொல்கிறோமென்று முன்பே விளக்கப்பட்டுள்ளது. இந்த மூல சக்தி பல அசேதன-உயிரற்ற பொருள்களை ஆக்கவும், அழிக்கவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின் றது. உயிர்ப் பொருள்களில் சிறப்பாக மனிதர்களில் அவர்களின் உடல், மன வாழ்க்கையமைப்புகளில் செயல்படும் சக்திகள் 24. இந்த 24 சக்திகள் காயத்ரியின் 24 அம்சங்களாலானவை என்றும் முன்பு கண்டோம். இந்த 24 தெய்வங்களின் பெயர்களையும் அவை மனிதர்களில் ஏற்படுத்தும் குணங்களைப் பற்றியும் சென்ற உபதேசத்திற் கண்டோம். அந்தச் சக்திகளை அவைகளின் குணங் களை நாம் பெறவேண்டுமானால் அந்தத் தெய்வங்களின் நாமத்துடன் காயத்ரியைச் சேர்த்து ஜெபம் செய்ய வேண்டும். அதற்காக இந்த உபதேசத்தில் அந்த 24 தெய்வ சக்திகளின் காயத்ரியை விளக்கியுள் ளோம். எமக்கு எந்தக் குணம் வரவேண்டுமே அதற்குரிய காயத்ரியை ஜெபித்தால் அந்தக் குணம் வந்துவிடும். பொதுவான காயத்ரி சாதகர்கள் இந்த காயத்ரிகளை சில முறை ஜெபித்தாலே அதற்குரிய பலன் உண்டாகிவிடும். நீங்கள் முறையான காயத்ரி உபாசனையின் மூலம் இதைப் பரீட்த்துப் பாருங்கள்.

**அருள்!!!!**

## காயத்ரியின் தெய்வ சக்திகள்

சென்ற உபதேசத்தில் எல்லாத் தெய்வங்களையும் வசப்படுத்தும் சக்தி வாய்ந்த காயத்ரி மந்திரத்தைப் பார்த்தோம். இப்போது அதன் பொதுப் பொருளை ஆராய்வோம்.

ஓம்:-எல்லா மந்திரங்களுக்கும் மூலமானது. இது இல்லாவிட்டால் எந்த மந்திரத்திற்கும் உயிரில்லை. இதைப்பற்றி பின்னால் விரிவாக ஆராய்வோம்.

பூர்-பூலோகம்: புவ-பிராணலோகம்: ஸ்வஹ-சுவர்க்கலோகம். ஆன்மா தன் பரிணாமத்தை முடித்து "பிறவாப் பேரின்பமாம் முத்தியை அடையும் வரை இந்த மூன்று உலகங்களில்தான் மாறி மாறி வசித்துக் கொண்டிருக்கும். பௌதீக உடலுடன் பூலோகத்தில் பிராண உடலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணலோகத்தில் பிறகு மன உடலுடன் ஸ்வர்க்கலோகத் தில் வாசம் செய்யும். பூலோகம், கர்ம பூமி, புண்ணிய பாபங்களைச் செய்வதற்கான இடம். இதை விட்டபின் உடனே பிராண உலகில் செய்த பாபங்களுக்குத் தகுந்த வேதனைகளை அனுபவித்து முடித்த பின் மன உடலுடன் சுவர்க்க லோகத்தில் செய்த புண்ணியத்தில் கால அளவுக்கு வசித்த பின் மறுபடி அன்னையின் வயிற்றில் கருவடைகிறது. எத்தனை முறை இந்த வாசங்கள் எடுத்தாலும் வாசனைகள் இப்படியேதான் சுழன்று கொண்டிருக்கும். வாசனை முற்றும் அழிந்தபின் நான்காவது உலகம் முதல் படிப்படியாய் உயர்ந்து சென்று ஏழாவது உலகமாகிய மோக்ஷத்தை அடைகிறது. உலகங்கள் ஏழு இருப்பதைப் பற்றியும் அது பற்றிய மற்ற விபரங்களையும் வரும் உபதேசங்களில் படித்தறிவீர்கள். ஆக பூர் புவஹ-ஸ்வஹ என்பது காயத்ரி மந்திரத்தில் அடைச் சொற்கள் அசல் மந்திரமல்ல. இம் மூன்று உலகங்களிலும் ஆன்மாவின் கர்மாவுக்குத் தக நடத்தும் சக்தி காயத்ரி என்பதைக் குறிக்க மந்திரத்தின் முதலில் இம்மூன்று வியாஹ்ருதிகளைச் சேர்க்கின்றோம்.

**இனி மந்திரப் பொருள்**

தத்-அந்த, ஸவிது-சவிதாவின், வரேண்யம்-வரிக்க, ஏற்க-கிரகிக்கத்தகுந்த, பர்க-சக்திக்கிருப்பிடமான தேவஸ்ய/தேவனின்/தீமஹி-தத் தியானிப்போமாக, திய-அறிவை, ய-யார், நஹ-நமக்கு, ப்ரசோதயாத்-அளிக்கிறாரோ.

பொதுப் பொருள்:நமக்கு அறிவைக் கொடுத்தருளும் அந்தச் சவிதா தேவனின் கிரகிக்கத்தகுந்த சக்தியை நாம் தியானிப்போமாக. சவிதா தேவன் ஒளிமயமான காயத்ரி சக்தி, முதல் உபதேசத்தில் ஒளி தெரியும் என்று சொன்னோமே அதுதான் சவிதா. காயத்ரி சக்தியின் ஒளி வடிவம்.

சாதகரே! இந்தப் பொதுப் பொருளை விரிவுபடுத்தி காயத்ரி மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்துக்கும் உள்ள பொருளை ஆராய்வோம்.

காயத்ரி மந்திரத்தில் 24 எழுத்துக்கள் உண்டு.

1.தத், 2.ஸ, 3.வி, 4.துர், 5.வ, 6.ரே, 7.ணி, 8.யம், 9.பர், 10.கோ, 11.தே, 12.வஸ், 13.ய, 14.தீ, 15.ம, 16.ஹி, 17.தி, 18.யோ, 19.யோ, 20.ந, 21.ப்ர, 22.சோ, 23.த, 24.யாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் சொல்லும்போது வரேண்யம் என்று சொல்லுவது சந்தி சேர்க்கை. உண்மையில் வரேண்யம் என்புதுதான் அட்சரசேர்கை. இந்த 24 எழுத்துக்கள் தனித்தனியாய் உச்சரிக்கப்படும்போது 24 வகைத் தெய்வ சக்திகள் விழிப்படைகின்றன.

அந்தத் தெய்வ சக்திகள்

1.அக்னி, 2.பிரஜாபதி, 3.சந்திரன், 4.ஈசானன், 5.சாவித்ரி, 6.ஆதித்யன், 7.பிரஹஸ்பதி, 8.மித்ரா, வருணன் 9.யமன், 10.ஈஸ்வரன், 11.கணபதி, 12.திவஷ்டா, 13.பூஷா, 14.கிந்திராக்னி, 15.வாயு, 16.வாசுதேவன், 17.வருணன், 18.வைஸ்வதேவன், 19.மாத்ருகன், 20.விஷ்ணு, 21.வசுகணம், 22.ருத்ரகணம், 23.குபேரன், 24.அஸ்வினி குமார்.

இதில் பல பெயர்கள் பொதுவாக மக்கள் கேட்டிருக்க மாட்டார் கள். பூமியின் சுழற்சியை மனிதனுடன் சம்பந்தப்பட்ட விஷ்ணு, ருத்ரன், அக்னி, முதலான தேவர்களை மட்டும்தான் அறிந்திருப்பார் கள். ஆனால் மனிதனின் நேர்த் தொடர்பில்லாமல் அவன் வாழும் உலகையும், அதைச் சேர்ந்த பிரபஞ்சத்தையும் நடத்தும் தெய்வ சக்திகள் இந்த 24. வேதங்களில் இந்த ஒவ்வொரு சக்தியும் பிரபஞ்சத்தில் என்ன செய்கிறது என்பது விளக்கப்பட்டுள்ளது. ஸ்தூல, சூக்ஷ்ம உலகங்களைச் செயல்படுத்துபவை இந்த 24 தெய்வ சக்தி கள் ஒவ்வொன்றும் மனித வாழ்வில் ஒவ்வொரு விதமாகத் தொடர்பு கொள்கிறது. எந்தத் தெய்வ சக்தியாவது மனிதனின் அமைப்பின் பயனாய் சரியாகச் செயல்படவில்லையானால் மனிதனில் நோய், ஆபத்து தொல்லைகள் உண்டாகின்றன.

காயத்ரி சாதனையால் இந்த 24 தெய்வ சக்திகளும் மனிதனு க்கு நன்மையையே செய்வதாகச் செயல்படுகின்றன. இதன் பயனாய் மனித வாழ்வு அமைதியும், இன்பமும் நிறைந்ததாய் இக, பரமிரண்டுக் கும் நன்மை பயப்பதாய் அமைகிறது. சாதகரே! அதனால் கலவரமில் லாமல் காயத்ரி சாதனையைச் செய்து வாருங்கள்.

**அருள்!!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரியின் அருள் விலாசம்

சென்ற உபதேசத்தில் காயத்ரியின் 24 எழுத்துக்கள் எந்தெந்தப் பிரபஞ்ச தெய்வசக்தியை ஆள்கிறது எனக் கண்டோம் சாதகரே! இந்த 24 தெய்வ சக்திகள் மனித வாழ்வின் எந்தப் பண்பைக் கொண்டுள்ளது என்பதை இப்போது விளக்குகிறோம்.

1.ஆரோக்கியம், 2.நீண்ட ஆயுள், 3.திருப்தி, 4.போஷணை, 5.அமைதி, 6.சிறப்பு, 7.செல்வம், 8.புகழ், 9.பிறர் தயவு கிடைத்தல், 10.மேன்மை, 11. சௌபாக்கியம், 12.சக்தி, 13.தேஜஸ், 14.நல்ல மனைவி அல்லது மணாளன், 15.நல்லதோர் தொடர்பு, 16.வெற்றி, 17.கல்வி, 18.நல்லறிவு, 19.நற்பெயர், 20.நல்லவை தேடி வந்தடைதல் 21.அருஞ்செயலாற்றும் திறமை, 22.நல்ல இயக்கம், 23.சுவர்க்க இன்பம், 24.முத்தி–மோக்ஷம்.

சாதகரே! இந்த ஒவ்வொன்றையும் பெற நீர் வெவ்வேறு சாதனைகளைச் செய்ய வேண்டும். வெவ்வேறு தெய்வங்களை வழிபட வேண்டும். வெவ்வேறு மந்திர சாதனைகளைச் செய்ய வேண்டும். ஆனால் காயத்ரி சாதனை ஒன்றை மட்டும் முறையாகச் செய்து வந்தால் இவ்வளவும் கைகூடுமானால் இதைப்புறக்கணிக்கலாமா?

முன்னர் சொன்ன நன்மைகள் மனிதனுக்கு கிடைக்க வேண்டுமானால் அவன் வெவ்வேறு மந்திரங்களை ஜெபித்தாக வேண்டுமே! காயத்ரி மந்திரம் ஒன்றால் எப்படி இந்த வெவ்வேறு மந்திரப் பலன்கள் கிடைக்கின்றன என்பதைப் பார்ப்போம். ஒவ்வொரு மந்திரத்துக்கும் ஒரு பீஜாட்சரமுண்டு. லக்ஷ்மி மந்திரத்துக்கு ஸ்ரீம். இப்படி காயத்ரி மந்திரத்தின் 24 எழுத்துக்களில் முக்கியமான முன் சொன்ன பலன்களைத் தரும் மந்திரங்களின் அதற்குரிய தெய்வங்களின் பீஜாட்சரம் அடங்கி இருக்கிறது. காயத்ரி மந்திர எழுத்துக்களின் பீஜாட்சரங்களைக் காண்போம்.

1.ஓம், 2.ஹ்ரீம், 3.ஸ்ரீம், 4.க்லீம், 5.ஹ்ரோம், 6.ஜூம், 7.யம், 8.ரம், 9.லம், 10.வம், 11.ஸம், 12.ஸம், 13.ஐம், 14.க்ரோம், 15.ஹூம், 16.ஹ்லீம், 17.பம், 18.பம், 19.டம், 20.டம், 21.மம், 22.யம், 23.க்ஷம், 24.லம்.

ஒவ்வொரு பீஜாட்சரத்தையும் விடாமல் ஜெபித்தால் அதற்குரிய தெய்வ சக்தி விழிப்படைந்து அதற்குரிய பலனைத்தரும். உதாரணமாக லக்ஷ்மி பீஜமாகிய ஸ்ரீம் என்பதை விடாமல் ஜெபித்தால் லக்ஷ்மியின் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்களை ஜெபித்த பயனாக லக்ஷ்மியின் பேரருள் கைகூடும். இப்படி இப்போது சொல்லப்பட்ட ஒவ்வொரு பீஜாட்சரமும் ஒரு தெய்வ சக்தியை விழிப்பிக்கச் செய்வதா கும். 24 பீஜாட்சரங்களையும் தனித்தனியாய் ஜெபித்துப் பயன்பெற வேண்டுமானால் வாழ் நாள் போதுமா? ஆனால் காயத்ரி மந்திரம் ஒன்றால் இந்த 24 பீஜாட்சரங்களின் சக்திகளும் விழிப்படையுமானால் இதனிலும் சிறந்ததுண்டோ?

இன்னும் காயத்ரி மந்திரத்தின் 24 எழுத்துக்களின் அடிப்படைத் தத்துவங்களைப் பல கோணங்களில் விளக்கலாம். உதாரணமாக இந்த 24 எழுத்துக்கள் 24 நிறங்களை உண்டாக்கும். 24 அசல், கலவை இரத்தினங்களைக் குறிக்கும். மனிதனின் கர்மேந்திரியங்கள்-05, ஞானேந்திரியங்கள்-05, இவைகளை இயக்கும் பிராணங்கள்-10, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆக அந்தக் கரணங்களைச் சேர்த்தால் 24 ஆகிறதல்லவா? இந்த 24 அமைப்பும் காயத்ரியின் அட்சர சக்திகளால் உண்டானவை. அதனால் காயத்ரி மந்திர சாதனையில் மனிதனின் இந்த 24 கருவிகளும் செவ்வனே செயற்பட்டு மனிதனைத் தெய்வமாக வாழவைக்கிறது. காயத்ரி-சாதனை செய்பவன் உடலாலும், மனதாலும் ஒரு தெய்வமாக உலகில் உலாவுவான். அவனில் அவனுக்குத் தெரியாமலே தெய்வ சக்திகள் செயல்பட்டுக் கொண்டிருக்கும். இதன் பயனாய் அவன் மண்ணுலகில் விண்ணுலக இன்ப நிலையுடன் வாழ்வதன்றி அவனை அணுகுபவர்களும் அவன் தெய்வக் கதிர்வீச்சால் பயனடைவார்கள். அவன் ஒரு மலர் வனத்தில் வசித்தால் அவ்வனத்தில் எப்போதும் மலர்கள் இருந்து கொண்டிருக் கும். அவன் கனிதரும் மரங்களடர்ந்த தோப்பில் இருந்தால் அங்கு எப்போதும் கனிகள் இருந்துகொண்டிருக்கும். அவன் வீட்டில் எப்போதும் உணவுப் பஞ்சம் இருக்காது. உடை, அணி, பணிகள், குடும்பத்தாருக்குக் குறைவில்லாமல் இருக்கும்.

சாதகரே! இத்தகைய பெரு நலன்களைப் பெறச் செய்யும் ஓர் மந்திரத்தையோ, தெய்வத்தையோ நீங்கள் கேட்டதுண்டா? இப்போது உங்கள் உள்ளம் கேட்பது "காயத்ரியால் இத்தகைய பலன்களை நான் பெறுவது எப்படி?" ஒரே நாளில் உடனடியாக அதைப்பெற முடியாது. அதற்கான வழிகளைத் தான் இந்த உபதேசப் பாடங்களில் விளக்கி வருகிறோம். அதன்படி நீங்கள் தவறாமல் செய்து வந்தால் நிச்சயம் நாம் சொன்ன பலன்களனைத்தையும் பெறுவீர்களென்பது திண்ணம்.

***அருள்!!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரியும் உடல் மனத் தூய்மையும்

''நாத விந்துகலாதி நமோ'' என்ற தோத்திரத்தைப் படித்தோ, கேட்டோ இருப்பீர்கள். நாதம் என்பது ஒலி. காதில் கேட்பதுதான் ஒலி என்று நினைத்துவிடக்கூடாது. ஓரளவு வேகத்துடன் ஒலிக்கும் ஒலிகள் தான் காதில் கேட்கும். மிக அதிகமான வேகமுள்ள, குறைந்த வேகமுள்ள ஒலிகள் காதில் கேட்கா, நம் காதில் படாமல் எத்தனையோ ஒலியலைகள் நம்மைச் சுற்றிலும் ஒலித்துக் கொண்டி ருக்கின்றன. சிறு ஒலியோ, பெரிய ஒலியோ அது ஒலிக்கும் இடத்திலு ள்ள ஆகாய மண்டலத்தில் ஒரு வித அசைவு இயக்கத்தை உண்டாக் கியே தீரும். அந்த இயக்கமும் நம்மால் உணரப்படும். நம்மால் உணரப்படாத எத்தனையோ ஒலியால் சலனிக்கச் செய்யப்பட்ட அசைவுகள், இயக்கங்கள், நம்மைச் சுற்றியுள்ள ஆகாயத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நம்மால் உணர முடியாவிட்டாலும் இவ்வொலி இயக்கங்கள் நம் உடலிலும், மனதிலும் ஒரு வகை மாறுதலை உண்டாக்கிக் கொண்டேயிருக்கின்றன. காரணம் தெரியா மல் உடலில் ஓர் அசதி, மனதில் ஒரு சோர்வு உண்டாவது இத்த கைய ஒலித்தாக்குதல்களால்தான். "நேற்றுவரை இப்படி எண்ணிவந்த அவன் திடுமென இன்று இப்படி எண்ணத் தொடங்கிவிட்டான்'' என்பவை போன்ற மாற்றங்கள் இத்தகைய ஒலியலைகளின் தாக்குதலால் உண்டாகலாம்.

வெளி ஒலிகள் மட்டும் நம்மைத் தாக்கவில்லை. நாம் ஒலிக்கும் ஒவ்வொரு எழுத்தும், சொல்லும், வாக்கியமும், நம்மில் ஒருவகை மாறுதலை உண்டாக்கவே செய்கின்றது. சில மொழிகளில் சில அட்சரங்களின் ஒலி அதிகமாய் ஒலிக்கப்படும். இதன் மாறுதல் அம்மொழி பேசும் மக்களில் ஒருவகை அமைப்பை உண்டாக்குகிறது. இரண்டு கண், காது என்பதில்லாமல் மனிதனின் சூக்ஷ்மமான தோற்றத் தைக் கவனித்தால் ஒவ்வொரு மொழி பேசும் மக்களின் உடலின் சூக்ஷ்ம தோற்றம் மாறுபட்டிருக்கக் காணலாம். ஒவ்வொரு மொழி பேசும் மக்களின் நினைப்பிலும் ஒருவகைத் தனித்தன்மை இருக்கும். காட்டுமிராண்டிகள் அப்படியிருக்கவும், கொடிய செயல்களைப் புரியவும், அவர்களின் கரடுமுரடான மொழியும் ஒரு காரணம். மென்மையான ஒலிகளை அதிகமாய்க் கொண்ட மொழியைப் பேசுபவர்கள் நல் எண்ணம் கொண்டவர்களாகவும், மிருதுவான உடல்வாகு கொண்டவர் களாகவும் இருப்பார்கள்.

ஒரு கருத்து வாக்கியத்தை அடிக்கடி உறுதியாய்ச் சொல்லி வந்தால் அக்கருத்துக்குரிய மாறுதல் ஏற்படும் என்பதைப் பல ஆராய்ச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் கண்டறிந்த மனோதத்துவ வல்லுநர்கள் "கருத்து சிகிச்சை" என்ற ஒரு முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். கருத்து சிகிச்சை (Auto Suggession) இன்று பலரால் கையாளப்பட்டு வெற்றி காணப்பட்டி ருக்கிறது. தலை வலியிருப்பவன் "எனக்கு வலியில்லை" என்று உறுதி யாகப் பலமுறை சொல்லி வருவானானால் மெதுமெதுவாக அவன் தலை வலி குணமாகி விடுகிறது. எப்படி? சொல்லும் கருத்து வாக்கியங்களின் ஒலியலைகள் உடலைத் தாக்கி நோயைக் குணப்படுத்துகிறது.

மனிதன் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் அவனில் மாறுதலை உண்டாக்குகிறது என்பதை விளக்கவே நாம் இவ்வளவும் சொன்னோம். சாதகரே! சாதாரண ஒலிகளுக்கே இந்தத் தன்மை உண்டென்றால் காயத்ரி மந்திரத்தை அடிக்கடி வாயாலோ, மனதாலோ உச்சரிக்கும்போது உடலில் அரிய மாறுதல்கள் நடைபெறும் என்று சொல்லவும் வேண்டுமா? உடலில் நடைபெறும் இம் மாறுதல்கள் உடலின் பிராணக் கதிர் வீச்சின் வழி அவன் சுற்றுப்புற ஆகாய மண்டலத்தில் மாறுதலைச் செய்யுமென்று சொல்லவும் வேண்டுமா? நான் இந்த உபதேசத்தில் சொல்லவிரும்புவது இதுதான். நீங்கள் காயத்ரி மந்திரத்தை வாயாலோ, மனதாலோ உச்சரிக்கும் போதெல் லாம் உங்கள் உடலின் சப்ததாதுக்களிலும் ஒருவகை தனித்தன்மை உருவாகிறது. இது உங்கள் சப்ததாதுக்களின் குற்றங்களை மெது மெதுவாய்ப் போக்குகிறது. உங்கள் உடலின் அணு அணுவிலும் காயத்ரி ஒலிகள் தாக்கி அங்குள்ள மாசு மறுக்களைப் போக்கித் தூய்மைப்படுத்துகின்றன. இதன் பிரதியாக மனதில் எப்போதும் எழும் கெட்ட பாப எண்ணங்களின் தன்மைமாறி நல்ல எண்ணங்கள் உதிக்கத் தொடங்குகின்றன. முன் உபதேசங்களில் சொல்லியுள்ள காயத்ரி மந்திர அட்சரங்களின் தன்மைகளை அறிந்திருந்தால் இந்த அட்சர அலைகள் உடலுக்குள்ளும், வெளியிலும் "அலைக் கழியும் போது அரிய மாறுதல்கள், தெய்வீக மாறுதல்கள், தூய்மை மாறுதல்கள் நடைபெறும் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

உடலை, இரத்தத்தை, மனதை, சுத்தி செய்யக் கண்ட மருந்து களைப் பயன்படுத்துபவர்கள் முறையாகக் காயத்ரி மந்திர தீக்ஷை பெற்று காயத்ரி உபாசனை செய்து வருவார்களானால் எந்த மருந்தின் தேவையுமின்றி அவை உடலையும், மனதையும் தூய்மைப் படுத்தும் என்பதை இப்போது புரிந்து கொண்டிருப்பார்களென நம்புகி றேன். தூய்மையென்றால் பொய்யறிவு மாறி மெய்ஞானம் தோன்றும். மாயை அகன்று மகா சக்தி தோன்றும் என்று சொல்ல வேண்டுமா?

**சாதகரே! விடாமல் காயத்ரி சாதனையைச் செய்துவாருங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி பிராணாயாமம்

*ஓம் பூர் புவ: ஸ்வ: தெளிவாக மனதில் சொல்லியபடி பூரகம் செய்யவும்.*
*தத்ஸவிதுர் வரேண்யம்: –மனதில் சொல்லியபடி உள் கும்பகம் செய்யவும்.*
*பர்கோ தேவஸ்ய தீமஹி: – மனதில் சொல்லியபடி ரேசகம் செய்யவும்.*
*தீயோ யோ ந: ப்ரசோதயாத்: – மனதில் சொல்லியபடி வெளிக்கும்பகம் செய்யவும்.*

பிராணக் கிரியைகளில் நேரமும் மனதில் மந்திரம் சொல்லும் நேர மும் சமமாயிருத்தல் வேண்டும். காற்றை உள்ளிழுக்கத் தொடங்கும் போதும் முதல் பதத்தின் பூர் தொடங்கி, காற்றை முழுவதும் இழுத்த நிலை யில் ஸ்வ சொல்லி முடிக்கவேண்டும். உள் கும்பகம் தொடங் கும்போது தத் தொடங்கி அது முடியும் போது யம் முடிக்கவேண்டும்.

முதலில் ரேசக பூரக கும்பங்களைச் செய்யும் நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டு அதற்குத் தக மந்திரபதங்களை சமமாகவோ, மெதுவாகவோ மனதில் சொல்லி சரி செய்து கொள்ளவேண்டும். மந்திரத்தை மெதுவாய் சொல்வதற்காக பிராணக் கிரியைகளை அதிக நேரம் செய்யக்கூடாது. பிராணாயாமத்தை முறையாகச் சிரமமில்லாமல் செய்யக்கூடிய நேரத்தை அறிந்து அதற்குத்தக மந்திர உச்சாடனத் தைச் சரி செய்து கொள்ள வேண்டும். பிராணாயாமம் எத்தனை தடவை எளிதாகச் செய்ய முடியுமோ அத்தனை தடவை மட்டும் இப்படிச் செய்க. இப் பிராணாயாமத்தினால் உயர் ஞானம் சித்திக்கும். மோக்ஷப் பேறும் உண்டாகும்.

காயத்ரி தேவியின் உருவைத் தெளிவாக மனக்கண்ணில் பார்த்துப் பழகும்வரை அவளது படத்தை எதிரில் வைத்துப் பார்த்துப் பார்த்துச் சாதனை செய்து வரவும். மனக்கண்ணில் தெளிவாக உருவைப் பார்க்கப் பழகிய பின்பு படம் தேவையில்லை. இத்துடன் காயத்ரி மந்திரத்தைச் சரியாக உச்சரிக்கத் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து மனப்பாடம் செய்துகொள்ளவேண்டும்.

இப்போது காயத்ரி தேவியின் உருவத்தியானம்:– மனக்கண்ணில் அல்லது படத்தில் முதலில் கசை (சவுக்கு) யையும், பாசத்தையும் பார்த்துக் கண்களை மூடி கசையை உம்மில் போட்டுப் பிணைத்து அதன் வழி உமது பாசங்களை வெளியிழுப்பதாகப் பாவனை செய்யுங்கள். பிறகு கபாலத்தையும், அங்குசத்தையும் பார்த்து உங்கள் தலையில் அங்குசத்தால் குத்துவதைப் போலவும், அதனால் உங்கள் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாகக் கெட்ட எண்ணங்கள், அறியாமை, அகந்தை, வல்வினைகள் தெறித்தோடுவதாகவும் பாவனை செய்யுங்கள். பிறகு சங்கைப் பார்த்து அதிலிருந்து தெய்வீக நாதம் வெளிவருதாகப் பாவித்துக் கேளுங்கள். பிறகு அவளின் அபயாஸ்தத்தைப் பார்த்து உங்களில் எதற்கும் அஞ்சாத துணிவு உண்டாவதாகப் பாவனை செய்யவும். பிறகு வரம் தரும் கரத்தைப் பார்த்து அக்கையிலிருந்து தெய்வீகக் கிரணங்கள் உம்மை வந்து தாக்குவதாகப் பாவிக்கவும். பிறகு இரு தாமரைகளைப் பார்த்து நீங்கள் மெதுவாக உடலை விட்டு ஆகாயப் பரப்பில் பறப்பதாகப் பாவிக்கவும்.

ஆகாயத்தில் கலந்த நிலையில் அவளின் ஐந்து முகங்கள், ஒவ்வொன்றையும் ஆகாயத்தில் கண்டு பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயத் தத்துவங்கள் (மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) உம்மிலிருந்து வெளிப்படுவதாகப் பாவியுங்கள். இப்போது அவளின் மூன்றாவது கண்ணைப்பார்த்து உங்களுக்கு சூக்ஷ்ம உலகமான தெய்வலோகம் தெரிவதாகப் பார்க்க முயற்சி செய்யுங்கள். முடிவாக அவள் கிரீடத்திலுள்ள சந்திரனைப் பார்த்து இதுவரை அனுபவித்த பேரின்பத்தையும், ஆனந்தத்தையும் அனுபவிப்பதாகப் பாவியுங்கள்.

"என்ன இது? வெறும் மனோ ராஜ்யமாயிருக்கிறதே" என்று கருதி விடாதீர்கள். "யத்பாவம் தத்பவதி" நீ பாவிப்பது அப்படியே ஆகும். எலியொன்று உணவின் வழி உள்புகுந்துவிட்டது என்று பாவித்தால், நம்பினால் உண்மையாகவே எலி இருப்பது போன்ற தன்மைகள் உண்டாகும். பழுது தீண்டிய போது பாம்பு கடித்ததெனப் பயந்தால் பாம்பின் விஷம் உடலில் உண்டாகும். உண்மையான பாம்பு கடித்தபோது பழுதுதான் பட்டதென்று நம்பச்செய்தால் பாம்பின் விஷம் பரவாது. இப்படி ஆயிரக்கணக்கான உதாரணங்களை இன்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அதனால் நீங்கள் செய்யும் பாவனை நம்பிக்கையுடன் கூடியதாயிருந்தால் இந்நிலையே நிச்சயமாக உம்மில் நடந்தேறிவரும். மிகப் பழங் காலத்திலேயே அறிவாளிகளிடம் இந்த அனுபவம் இருந்த தென்பதற்குச் சான்று திருக்குறளில் கீழ் வருமாறு காணப்படுகிறது.

***"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணி திண்ணியராகப் பெறின்"***

ஒன்றை நினைப்பவர் அதில் முற்றும் உறுதி, நம்பிக்கை உடையவரானால் அவர் எண்ணியது எண்ணியபடியே நடந்தேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மனிதனின் வாழ்க்கையின் அமைப்பு முழுவதும் அவன் தெரிந்தோ, தெரியாமலோ எண்ணிய நம்பிக்கையுடன் எண்ணிய எண்ணங்களின் பலனே. அதனால் சிறிதும் ஐயமில்லாமல் இதில் கூறப்பட்ட பாவனைகளை நம்பிக்கையுடன் செய்து வந்தால் அவை உம்மில் உண்டாகுமென்பதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம்.

இனிக் காயத்ரி மந்திர தியானத்தைக் கவனிப்போம்.

ஓம் பூர்: என்று மும்முறை சொல்லி மனதால் உங்களுக்குத் தெரிந்த அளவு மண்ணுலகத்தைச் சுற்றி வாருங்கள். புவ என்று மும்முறை சொல்லி பிராண லோகத்தைச் சுற்றி வாருங்கள். ஸ்வா: என்று மும்முறை சொல்லிச் சுவர்க்க லோகத்தைச் சுற்றி வாருங்கள். தத்ஸவீதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி என்று மும்முறை சொல்லி சூரியன் வழியாகத் தெய்வக்கதிர்கள் உம்மை வந்து தாக்குவதாகப் பாவனை செய்யுங்கள். தியோயோ ந: ப்பிரசோதயாத் என்று மும்முறை மனத்தால் சொல்லிவிட்டு உமக்குள் உணர்வைச் செலுத்திப் பேசாத மௌனநிஷ்டையில் இருங்கள்.

ஒருமுறை இப்புத்தகத்தை படித்துவிட்டு உடனே சாதனை செய்யத் தொடங்கிவிடாதீர்கள். பலமுறை படிப்பதுடன் மனதில் நன்றாகச் சொல்லியுள்ளதைப் புரிந்துகொண்டு பதித்துக் கொண்ட பிறகு சாதனை செய்யத் தொடங்கவும். ஒவ்வொரு நாள் சாதனையின் போதும் உங்கள் பாவனை உறுதியற்றதாயிருந்தாலும் அதன் பயன் அணு அணுவாக உமக்குக் கிடைத்துக் கொண்டிருக்குமென்பதில் ஐயம் கொள்ளாதீர்கள். காயத்ரி உபாசனை செய்பவர்கள் உபாசனை முடிவில் இந்தத் தியானத்தைச் செய்யலாம்.

ஓரளவு இந்தக் காயத்ரி தியானத்தை நன்றாகச் செய்து அதன் பயனால் தம் வாழ்க்கையில் சிறிது மாறுதல் ஏற்படத் தெரிந்த வர்கள் பின் காயத்ரி சாதனையைச் செய்யத் தொடங்கலாம். இதன் பயனால் மிக உயர்ந்த ஞான நிலைக்குப் போகலாம். விரைவில் காயத்ரி சாதனை பற்றிய விளக்கமான புத்தகத்தை வெளியிடுவோம்.

இந்தத் தியானத்தால் உறுதியாகப் பயன்பெற விரும்புபவர்கள் காயத்ரி தீக்ஷை பெற்று சாப விமோசனம் செய்து கொள்வது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதையில்லாத நிலத்தில் பயிர் விளையாதது போல் தீக்ஷா பீஜம் பெறாத உள்ளத்தில் சாதனையின் பயன் விளையாதது போல் தீக்ஷை என்ற பெயரால் மந்த்ரோபதேசங்களைச் செய்வித்தும் வேடங்களை அணிவித்தும் செய்யும் தவறான தீக்ஷையைப் பெற்றுப் பயனில்லை. காயத்ரி புரச்சரணம் நன்கு முடிந்து சித்தி பெற்றவர்கள் நற்சக்தி பீஜத்தைப் பெறுவதுதான் தீக்ஷை. ஸ்ரீ காயத்ரி பீடம் மூலம் பல நாடுகளில் ஆயிரக்கணக்கானவர்கள் உண்மையான தீக்ஷை பெற்று உபாசனை மூலம் அரிய பலன்களைப் பெற்று வருகிறார்கள்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லற வேள்வி

சாதகரே! நீங்கள் நேராக உங்கள் உடல், உயிர், மனம் புத்திகளைத் தூய்மைப்படுத்தும் உள்முக சாதனைகளைச் செய்யுமுன் உடல், உயிர், மன புத்திகளைப் பல வகையில் செயல்ப்படுத்தும் இயற்கை அமைப்பு, வானப் பரப்பு, சூழ்நிலைகளை உங்களுக்கு உகந்த படியாகச் செய்துகொள்வதன் மூலம் இவைகளின் சாதனைகளை எவ்வித இடையூறும் கஷ்டமுமில்லாமல் செய்வதற்கான ஒரு வழி வேள்வி அக்னி ஹோத்ரம் ஓமம். இதுபற்றி எமது "யக்ஞசிகிச்சா" முதலிய பாடங்களில் படித்திருப்பீர்கள். அக்னி இருக்கும் இடத்தில் சுற்றுப்புற காற்று லேசாகி வெளியே செல்ல அங்கு வெளியிலுள்ள காற்று வந்து தூய்மையடைந்து செல்லும். இப்படியாகக் காற்றை வானப்பரப்பின் அமைப்பைத் தூய்மைப்படுத்துவது யக்ஞம். பிரபஞ்சம் பிரம்மனின் யக்ஞத்தால் தோன்றியது. ஸ்ரீராமன் யக்ஞத்தாலுண்டான வன், மற்றும் இதைப்பற்றி அரிய விஞ்ஞான விளக்கங்கள் நம் பாடங்களில் படித்தறிந்திருப்பீர்கள். நம் வீட்டின் காற்று மண்டலம் நம் உடலில் தாதுக்கள் நம் பிராண சக்தி, நம் மனம், புத்தி இவைகளை வெளிமுகத்திலிருந்து புனிதப்படுத்தும் சாதனம் யக்ஞம், ஊதுபத்தி கொளுத்துதல், தூபம் காட்டுதல், கற்பூரம் கொளுத்துதல், தீபாரதனை செய்தல், கிறீஸ்தவர்கள் மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்தல், முகமதியர்கள் சாம்பிராணித் தூபமிடல் முதலியவை யக்ஞத்தின் திரிபுகளே. பார்சிகள் அக்கினியையே பரம் பொருளாக வழிபடுகிறார்கள். பிரபஞ்ச மூலசக்தியான பரம்பொருளை "அக்னி" என்று வேதங்கள் விளக்குகின்றன. நம் உடல் ஓமகுண்டம், நாம் உண்ணும் உணவு அதில் போடும் ஓமத்திரவியம் என்பவற்றிலிருந்து தான் உடல் தாதுக்கள் உற்பத்தியாகின்றன.

சாதகரே! இன்னும் இதைப்பற்றி உங்களுக்கு அதிகம் விளக்க வேண்டியதில்லை என நினைக்கின்றேன். ஆக நேர்முகமாக உங்கள் 5 கோசங்களின் சாதனையை மேற்கொள்ள முன் யக்ஞத்தின் மூலம் அதைச் செய்ய ஏற்பாடு செய்யுங்கள். யக்ஞம் என்றவுடன் அதற்குப் பெரிய யக்ஞ குண்டம், மற்றும் பல பொருட்கள் தேவை. அத்துடன் தகுந்த மந்திரங்களைச் சொல்லவேண்டும். இவையெல்லாம் நம்மாலாகும் காரியமா? என்று மனம் சோர்ந்துவிடாதீர்கள். அடுத்த பாடத்தில் நீங்கள் வீட்டில் சமையல் செய்யும் சிரமத்தை விட குறைந்த சிரமத்தில் தினசரி யக்ஞம் செய்யும் முறையை விளக்குகின் றேன். தொடக்கத்தில் மலைப்பாகத்தானிருக்கும். ஆனால் போகப் போக மிக எளிய ஆனால் பெரும்பலனைத்தரும் ஒரு பெரிய தெய்வ சாதனையாக இது தெரிய வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பலன்கள் தெரிய வரத் தொடங்கும் போது இதை நீங்கள் இல்லாவிட்டாலும் வீட்டிலுள்ள வர்கள் தவறாமல் செய்யும் பழக்கம் வந்துவிடும். சமையல் செய்வது போல் பட்சணங்கள் செய்வது போல் வேள்வியும் உங்கள் வீட்டில் தினசரிக் கடனிலொன்றாகட்டும். இந்தப் பழக்கம் வந்துவிட்டால் உங்கள் ஊரில் காலரா போன்ற ஏதேனும் தொற்றுநோய்கள் பரவு தல்; அதற்காக நீங்கள் தனி முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

உங்கள் வீட்டின் வாயு மண்டலத்தில் அவை நுழைய முடியா. அப்படியே யக்ஞத்தால் தூய்மையாகியுள்ள உங்கள் உடலில் அவை புகா. புகுந்தாலும் இருக்கா. நீங்கள் சுவாசிக்கும் உங்கள் வீட்டின் காற்று தூய்மையானதாயிருக்கும். இது பழக்கத்துக்கு வந்தபின் நீங்கள் தகுந்த தூபங்களைப் பயன்படுத்தி நோய்களைக் குணப்படுத்த லாம். உங்கள் வீட்டு நபர்களின் மனக்கோளாறுகளை மாற்றலாம். அவர்களின் கெட்ட பழக்க வழக்கங்களை மாற்றி விடலாம். பூத ஹர தூபத்தைப் பயன்படுத்திச் செய்வினைக் கோளாறுகளைப் பேய், பிசாசு சேட்டைகளைச் செம்மைப்படுத்தலாம்.

தினசரி நெருப்பு மூட்ட உலோகத்தால் முக்கோண வடிவில் ஒரு யக்ஞ குண்டம் செய்து வைத்துக்கொள்ளுங்கள். அது முடியா விட்டால் வாயகன்ற ஒரு மண்சட்டியை ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். நெருப்பை மூட்ட அத்தி, அரசு, மா, பலா முதலியபாலுள்ள மரங்க ளின் சிறு சுள்ளிகளை ஏற்பாடு செய்து வைத்துக் கொள்ளுங்கள். முடியாத போது எல்லா விறகுத் தொட்டிகளிலும் கிடைக்கும் சவுக்குச் சுள்ளிக ளின் பட்டையை உரித்து விட்டுப் பயன்படுத்தலாம். நெருப்பு மூட்டக் கொஞ்சம் கற்பூரம், தனியாக ஏதும் ஹவன சாமக்கிரியோ தூபமோ, இல்லாத போது நல்ல சாம்பிராணியை உபயோகிக்கலாம். முடிந்தால் அத்துடன் சந்தனத்தூள், குங்கிலியம் சேர்த்துக்கொள்ளலாம். ஒரு சிறு கிண்ணத்தில் கொஞ்சம் நெய்யும், கரண்டியும் தேவை. மற்றொரு கிண்ணத்தில் நீரும், கரண்டியும் தேவை. இவைகளைத் தயார் செய்து கொண்டு எளிதாக நீங்கள் இப்படித் தினசரி வேள்வியைச் செய்யலாம். அதிகாலையில் அல்லது சூரியன் அஸ்தமிக்கும்போது மாலையிற் செய்யவேண்டும். முடிந்தால் வீட்டிலுள்ள அனைவரும் சுற்றி உட்கார்ந்து கொள்ளலாம். சட்டியில் சுள்ளிகளை அடுக்கி வையுங்கள். மூன்று முறை காயத்ரி மந்திரம் சொல்லி வலது உள்ளங்கையில் நீர் விட்டு உறிஞ்சிக் குடிக்கவும். எல்லோரும் செய்யலாம். பிறகு ''ஓம்'' என்று சொல்லியபடி கற்பூரத்தைக் கொளுத்திச் சுள்ளிகளை நடுவில் போட்டு சிறிது உருக்கிய நெய்யை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றி நன்றாக எரியச் செய்யவும். எரியும்போது காயத்ரி மந்திரத்தை எவ்வளவு முறை சொல்ல முடியுமோ அவ்வளவு முறை சொல்லி மந்திரத்தின் முடிவில் ஸ்வாஹா என்று சொல்லியபடி சிறிது தூபத்தைப் போட்டு நெய்யை ஊற்றுங்கள்.

ஓம் பூர் புவஹ ஸ்வஹ, தத்ஸவிதுர் வரேண்யம், பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோநஹ ப்ரசோதயாத் ஸ்வாஹா. முடிந்தால் முடிவில் இதம் காயத்ரியை இதன்னமம என்று சொல்லுங்கள். இப்படிக்கூடுமானவரை தினம் ஒரே அளவாய் செய்து வாருங்கள். பிறகு இரண்டு உள்ளங்கைகளையும் அக்கினியில் காட்டித் தலை, முகம், மார்புகளில் தடவிக்கொள்ளுங்கள். ஒரு வாரத்துக்கொரு தடவை குண்டத்திலிருக்கும் பஸ்பத்தை எடுத்துப் பத்திரப்படுத்துங்கள். இதன் உபயோக முறை பற்றி நமது ஸ்ரீ காயத்ரி பீடத்தில் தெரிந்து கொள்ளலாம்.

## காயத்ரி மய வாழ்க்கை

இதுவரை காயத்ரி சாதனைகளை நீங்கள் எந்தக் கருத்தோடு செய்து வந்திருந்தாலும் சரி, காயத்ரி சாதனையால் என்னென்ன நன்மை கிடைக்குமெனத் தெரியாமலே நம் குருஸ்வாமி அவர்கள் சொல்கிறார். அதனால் செய்யலாம், என்ன ஏற்பட்டாலும் படட்டும் என்ற கருத்தோடு செய்து வந்தவராயினும் இல்லை வேத காலம் தொட்டு இன்றுவரை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பாரதப் பெரியோர் கள் காயத்ரி சாதனையைச் செய்து வந்திருக்கிறார்கள். பல மேலை நாட்டுப் பெரியோர்களும், சமயத் தலைவர்களும் கூட காயத்ரி சாதனையைச் செய்திருக்கிறார்கள் என்றால் அதில் ஏதோ பெரிய நன்மைகள் இருக்கவேண்டும் என்ற நம்பிக்கையின்பேரில் செய்து வந்திருந்தால் உங்களுக்குப் பல அனுபவங்கள் ஏற்பட்டிருக்க வேண் டும். என்ன ஏற்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் பௌதீக உலகில் வேறெதனாலும் பெற முடியாத பல நன்மைகளை வெற்றிக ளைப் பெறுவதற்கான முறைகளை இப்போது விளக்குகிறேன். ஆனால் இதுவரை சொன்ன கோச சுத்தி, பூத சுத்திகள் வரை சரியாகச் செய்திருந் தால் நாம் சொல்லப்போகும் காரியங்களில் நிச்சயம் உங்களுக்கு வெற்றிகாணும் காரியத்தைச் சாதிக்குமுன் அந்த அமைதியான சாதனையை நீங்கள் வெற்றிகரமாகச் செய்து பயன்காணும் முன் அப்படி அமைதியையும், நிம்மதியையும், இதுவரை செய்த சாதனைகளால் பெறக்கூடிய வழிகளைச் சொல்கிறோம். இந்த வெற்றிகளை முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு அடுத்தபடி உரிய சாதனையைச் செய்யுங்கள். சாதகர்களே! நான் சொல்வதைத் தவறாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பின்பற்றி வந்தால் நிச்சயம் இந்தப் பிறவியில் நீங்கள் பிறவாப் பேரின்பத்தைப் பெறுமளவுக்கு உங்களுக்கு வழிகாட்டுவேன் வழிகாட்டத்தான் என்னால் முடியும். ஆனால் அந்த வழியில் நடந்து குறிக்கோளை அடைவது உங்கள் பொறுப்பு. இப்போது நான் சொல்லப்போவதைக் கவனமாகப் படித்து வாழ்க்கை யில் பயன்படுத்தி வாருங்கள். பிரபஞ்சத்தின் உயரினங்களின் உள்ளும், புறமும் ஓர் அறிவுச் சக்தி, சைதன்ய சக்தி நிறைந்து உயிர்களின் செயல்களுக்குத்தக நடத்திச் செல்கிறது என்ற நம்பிக்கை இருந்தால் நான் சொல்வதைத் தவறாமல் பின்பற்றி வாருங்கள்.

இதுவரை நான் சொல்லி வந்த சாதனைகளைச் செய்து வந்திருந்தால் இப்போது நான் சொல்லப்போகும் அனைத்திலும் நீங்கள் வெற்றி பெற்றுப் பயனும் காண்பீர்கள். நாள்தோறும் நீங்கள் காலையில் விழித்ததிலிருந்து ஆழ்ந்து தூங்கும் வரை செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் காயத்ரியைப் பயன்படுத்த வேண்டும்.

**கேளுங்கள்:**

01. காலை கண்விழித்தெழுந்ததும், வேறெந்த வேலையை நாம் தொடங்கு முன் படுக்கையிலிருந்தபடியே 1 முதல் 3 முறை காயத்ரியைச் சொல்லிவிட்டுப் பிறகு மூக்கில் கையை வைத்து எந்த மூக்கில் மூச்சு வருகிறதென்று பார்த்து அந்தப் பக்கத்தில் காலை முன் வைத்து நடக்கத் தொடங்குங்கள். காலைக்கடன்களை முறையாகச் செய்த பின்.

02. பல் துலக்கும்போது ஒரு முறை காயத்ரியைச் சொல்லிவிட்டு நினைத்து விட்டு பல் துலக்குங்கள்.

03. குளிக்கப் போகுமுன் நீங்கள் குளிக்கப்போகும் நீரில் எந்த நீராயினும் சரி உங்கள் இரு கைவிரல்களையும் நீரில் வைத்து ஓரிரண்டு முறை காயத்ரியைச் சொல்லுங்கள்.

04. நீரைத் தலையிலோ, உடலிலோ ஊற்றிக்கொள்ளும்போது காயத்ரியை இடையிடையே சொல்லியபடி ஸ்நானம் செய்யவும்.

05. காலை சிற்றுண்டிக்கான தயாரிப்புகளை எதிரில் வைத்துக்கொண்டு, ஆள்காட்டி விரலை அதன் மேல் நீட்டியபடி காயத்ரியைச் சொல்லி விட்டுச் சாப்பிடுங்கள், குடியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பகலுணவு, மாலைச் சிற்றுண்டி, இரவு உணவுகளின் போதும் இப்படிச் செய்யுங்கள்.

07. இரவில் பால் குடிப்பதுண்டானால் அப்போதும் இப்படிச் சொல்லி விட்டுக் குடியுங்கள்.

08. படுக்குமுன் படுக்கையில் உட்கார்ந்து காயத்ரியை சில முறை சொல்லிவிட்டுப் பின் படுங்கள்.

09. இப்படிச் செய்வதுடன் நீங்கள் வேலைக்குப் போகும் போதும், வேலை செய்யத் தொடங்கு முன்னும் காயத்ரியைச் சொல்லுங்கள்.

10. நீங்கள் வியாபாரம் செய்வதானால் வியாபாரம் தொடங்கு முன் காயத்ரியைச் சொல்லுங்கள்.

11. வங்கியில் ரொக்கம் போடும் போதும், வாங்கும் போதும் காயத்ரியைச் சொல்லுங்கள்.

12. பிறருக்குப் பணம் கொடுக்கும்போதும், கடன் வாங்கும் போதும் காயத்ரியைச் சொல்லுங்கள்.

13. யார் தயவையாவது நாடிப் போகும்போதும் காயத்ரியை ஜெபித்து விட்டுப் போங்கள்.

14. மகளுக்கோ, மகனுக்கோ கல்யாண விஷயமாய்ப் பேச்சு நடத்த வேண்டியபோது முதலில் காயத்ரியை ஜெபித்து விடுங்கள்.

15. புது வீடு கட்டுவதானால், கிணறு தோண்டுவதானால், எந்த வேலையைச் செய்வதானாலும் முதலில் காயத்ரியை ஜெபித்து விடுங்கள்.

16. பிள்ளைகளுக்குக் காயத்ரியைச் சொல்லி வைத்து அவர்கள் படிப்பைத் தொடங்கும் போதும், பரீட்சைக்குப் படிக்கும்போதும், பரீட்சை எழுதப் போகும் போதும் காயத்ரியை ஜெபித்து விட்டு செல்லச் சொல்லுங்கள். கேட்கவில்லை என்றால் விட்டு விடுங்கள். எந்த வகையிலும் வற்புறுத்தாதீர்கள். நல்லதைக் காண,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கபடிக்கவும் ஒரு வாய்ப்பு பரிணாம உயர்வு இருக்கவேண்டும் இல்லாதவர்கள் மனைவி, புத்திரன், புத்திரி, உறவினர், பந்து, நண்பன் யாராயிருந்தாலும் திருத்த முடியாதென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். "என்னுடையது, என்னுடையவர்" என்பதை மறந்து உங்களுடைது, உங்களுடையவர் காயத்ரி ஒன்றுதான் என்பதை நம்பி அந்த ஒன்றையே பற்றாகக் கொள்ளுங்கள். உண்மையான தாய், தந்தை, பந்து, நண்பன் எல்லாம் காயத்ரியே என உறுதியாக நம்புங்கள்.

சாதகரே! காலை கண்விழித்ததிலிருந்து, கண்ணயரும் வரை உங்கள் நினைப்பு, சொல், செயல், அனைத்தும் காயத்ரி மயமாய் இருக்கட்டும். இப்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்டு தொடர்ந்து காயத்ரி சாதனையைச் செய்யுங்கள்.

*அருள்!!!*

# காயத்ரி ஜெபம் செய்வதற்கான சில விசேஷ நியமங்கள்

(காயத்ரி ஜபத்தை இடங்கள், ஆசனங்கள் முதலிய நியமங்களுடன் அனுஷ்டிப்பதால் ஏற்படக்கூடிய பூரணபலன், குறைந்த பலன் முதலிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.)

### ஸ்தானம்

01. வீட்டில் சுத்தமான இடத்தில் அமர்ந்து காயத்ரி ஜபம் செய்தால் ஒன்றுக்கு ஒன்று பலன் உண்டாகும்.

02. நதிக்கரை அல்லது நீரோடைக் கரையில் அமர்ந்து காயத்ரி ஜபம் செய்தால் ஒன்றுக்கு இரண்டு பலன் உண்டு.

03. கோ (பசு) சாலையில் அமர்ந்து ஜபம் செய்தால் ஒன்றுக்கு 100 மடங்கு பலனுண்டு.

04. யாகசாலையில் அமர்ந்து ஜபம் செய்தால் ஒன்றுக்கு 1000 மடங்கு பலனுண்டு.

05. கோயில்கள், ஷேத்ரங்கள், மகான்கள் ஸித்தி பெற்ற இடங்கள், பாடல் பெற்ற ஸ்தலங்கள், இவைகளில் காயத்ரி ஜபம் செய்தால் ஆயிரம்..... லக்ஷம் கோடி என்று அதிக அளவில் பலன் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. ஸ்ரீமத் நாராயணனுடைய ஸந்நிதியில் காயத்ரி ஜபம் செய்தால் எல்லையில்லாப் பலனைத் தரும் என்று சிவபொருமானே கூறியுள்ளார்.

## உட்காரும் ஆசனங்கள்

01. மான் தோலில் உட்கார்ந்து காயத்ரி ஜபம் செய்தால் மனச் சாந்தியும், ஞானவிருத்தியும் ஏற்படும்.

02. தர்ப்பாஸனத்தில் அமர்ந்து ஜபம் செய்தால் உடலும், மனமும் சுத்தி பெற்று பாவங்கள் அகலும்.

03. பட்டு வஸ்திரம்மீது அமர்ந்து ஜபம் செய்தால் மென்மேலும் பாக்யம் வளரும்.

04. இரத்தினக் கம்பளத்தின் மீது அமர்ந்து ஜபம் செய்தால் அதற்கு முன் இருந்த துன்பங்களெல்லாம் நீங்கி அமைதி ஏற்படும்.

05. மரவுரி மீது அமர்ந்து காயத்ரி ஜபம் செய்தால் சரீர பலத்தை வளர்க்கும்.

## ஜபமாலை

01. ஏதோ ஒரு விதமாக எண்ணி ஜபம் செய்தால் ஒன்றுக்கொன்று பலன் உண்டு.

02. அநாமிகை என்னும் மோதிர விரலின் இரண்டாவது கோடு முதல தொடங்கி சுண்டு விரல் அடிக்கோடு முதல் பிரதிக்ஷிணமாக மேல் கோடுகள் வழியாக ஆள்காட்டு விரல் கணுக்களில் இறங்கி அடுக்கணுவில் வந்தால் 10 ஆகும். இப்படி விரைவில் 10, 10 ஆக எண்ணிக் காயத்ரி ஜபம் செய்தால் ஒன்றுக்குப்பத்து பலனுண்டு.

இதற்கு "மஹாமேருப்ரதக்ஷிணம்" என்று பெயர்.

03. "புத்ர ஜீவ" என்ற பெயர் கொண்ட மரக்கனியின் விதையினால் ஜபமாலை செய்து ஜபம் செய்தால் ஒன்றுக்கு 100 பலன் உண்டு.

04. பவளங்களால் ஜபமாலை அமைத்து அதில் எண்ணி ஜெபம் செய்தால் 1000 மடங்கு பலன் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பொன்மணிகளால் ஜபமாலை அமைத்து அதனால் எண்ணி ஜபம் செய்தால் லக்ஷம் மடங்கு பலன் உண்டு.

06. தர்ப்ப முடியினால் எண்ணி ஜபம் செய்தால் கோடி மடங்கு பலன் உண்டு.

07. துளசி மணிமாலை கொண்டு ஜபம் செய்தால் அனந்த பலன் உண்டு.

08. ருத்ராக்ஷ மாலையினால் எண்ணி ஜபம் செய்தால் அளவிற்கடங்காத பலன் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினந்தோறும் செய்ய வேண்டிய காயத்ரி ஜபத்தின் எண்ணிக்கை

பிரம்மச்சாரி:-தினந்தோறும் காலை, மத்யானம், மாலை இந்த மூன்று வேளைகளிலும் 108 தரம் காயத்ரி ஜபம் செய்தல் வேண்டும்.

கிருஹஸ்தர்:-கிருஹஸ்தர்கள் குறைந்த பக்ஷமாக 108 தரம் காயத்ரி ஜபம் செய்வது உத்தமமானது. ஆனால், அதற்கான ஓய்வு கிடைக்காதவர்கள் மட்டும் 54, 27 என்ற மிகக் குறைந்த பட்சத்தையும் பின்பற்றலாம்.

வானப்ரஸ்தர்களும் ஸந்யாசிகளும்:-தினந்தோறும் 2000 காயத்ரிக்குக் குறையாமல் ஜபம் செய்ய வேண்டும். இது அவரவர் ஸம்ப்ரதாய ரீதியாகத் தெரிந்து அநுஷ்டிக்க வேண்டும்.

## ஜபம் செய்யும் வகை

நான்கு விதமான ஜபங்கள் உண்டு.

1. சற்று உரக்க ஜபம் செய்தால் ஒரு பங்கு பலன் உண்டு.
2. மெதுவாக உச்சரித்துச் செய்தால் 10 பங்கு பலன் உண்டு.
3. உதடசையும்படி மட்டும் ஜபித்தால் 100 மடங்கு பலன் உண்டு.
4. மனத்தினால் மந்திரத்தை ஜபித்தால் 1000 மடங்கு பலன் உண்டு.

காயத்ரி உபாசகனுக்கு ஏற்படும் உயர் குணங்கள்:
மூவுலகங்களிலும் வியாபித்துள்ள ஓம் எனும் பிரமாவை அறிந்து உண்மை ஞானியாகுதல்.

உண்மை எனும் பிரமாவை அறிந்து, வித்வானாகி, தன் தபச் செய்கையால் உலகில் அஞ்ஞானத்தாலுண்டான இருளையகற்றிக் கொள்ளுதல்.

அநியாயத்தாலும், அசத்தியத்தாலும் உண்டாகும் ஆபத்துக் களை நாசம் செய்யும் பண்பு உண்டாதல்.

நல்ல ஆன்மீகனாகிப் பிரளய சமயத்திலும், தன் முயற்சியைத் தூய உள்ளத்தோடு செய்து கொண்டே புகழும், மகிமையும் பெறல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாளிகாளாகிய, பெண்களையே மண்ணுலகில் பிரத்யக்ஷ தெய்வங்களாக, நர்மதா நதியைப் போல் மதித்து மரியாதையாக ஒழுகும் சீரிய பண்பைப் பெறுதல்.

தம்மையறியாமலேயே தம் இந்தரியங்களைக் கட்டுப்படுத்தித் தன்னையறிந்து தலைவனை அறியும் ஆர்வம் உண்டாகுதல்.

தன் உடலிலும் உள்ளத்திலும் தூய்மையைப் பெற்று இகத்திலும், பரத்திலும் நிகரற்ற நித்யானந்தத்தைப் பெற்று, பேரின்பப் பெருவாழ்வு வாழ்வார்கள்.

இறைவனின் நியாயமான நியமங்களைத் தெரிந்து கொண்டு அந்நியமாதிகாரியான இறைவனின் உண்மையைப் புரிந்து கொண்டு தகுந்த முறையில் அவனை உபாசித்து உயர் பேரின்பத்தைப் பெற்று அனுபவிக்கும் ஆசையுடன் வாழ்தல்.

தன்னில் உதிக்கும் நல்லறிவுதான் தனக்கு உண்மையான வழிகாட்டியென்பதை உணர்ந்து நடப்பது எப்போதும் யாருடைய வழியையும் கண்மூடித் தனமாக நம்பாமல், இறையருள் பெற்ற மகான்களின் உபதேச நெறி நின்று வாழ்வது.

மரணத்தைப் பற்றி எப்போதும் நினைவிலிருத்தியபடி வாழ்க்கையின் மரணத்தை அறிய முயற்சித்தவாறு தன் குறிக்கோளை இறைமார்க்கத்தில் செலுத்தி வருவது.

எந்தத் தர்மம் இந்தப் பிரபஞ்சத்துக்கு ஆதாரமகவுள்ளதோ, அந்தத் தர்மத்தையே கடைப்பிடித்து அதனை அசட்டை செய்யாமல் இது ஒன்றுதான் நம் வழிக்கு உண்மையான உறுதியாய் இருக்கும் என்று வாழ்வது.

ஆத்மாவைக் கண்டு ஆத்ம கௌரவத்தைத் தெரிந்து கொண்டு ஆத்மாவை முன்னேற்றத்தின் பாதையில் நடத்திச் சென்று தெய்வத் தன்மை பெறுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி ஜபத்தின் ப்ரபாவம்
## (சில மஹான்களின் அனுபவங்கள்)

1

சில நூற்றாண்டுகளுக்கு முன் திருநெல்வேலியில் பாண்டிய மன்னன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு சமயம் தாங்கவொண்ணாத வயிற்று வலியால் தவித்துக் கொண்டிருந்தான். எத்தனையோ வகையான சிகிச்சைகள் செய்தும் அவன் வலி நீங்கவில்லை. இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. இதைக் கேள்வியுற்ற ஒரு ஜோதிடப் பண்டிதன் அரசனிடம் சென்று, 'நான் இந்த வலியை நீக்கிவிடுகிறேன். இது பூர்வ வினையினால் ஏற்பட்டது. இதற்குச் சாஸ்திர முறைப்படி சாந்தி செய்யவேண்டும்' என்றான். அரசனும் ஒப்புக் கொண்டான்.

சாந்தி கர்மாவுக்கான ஏற்பாடுகள் நடந்தன. ஒரு அறையில் எருமைக்கடா, எமன் இவர்களின் உருவங்கள் இரும்பினால் செய்து வைக்கப்பட்டன. அறை முழுவதும் தங்க நாணயங்களும், இரத்தினங் களும் குவிக்கப்பட்டிருந்தன. பிறகு "அந்த அறையிலுள்ள விலையு யர்ந்த பொருளை யார் வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்." என்று ஊர் முழுவதும் தண்டோரா போடப்பட்டது. பலர் ஆசையோடு அந்த அறைக்குள் சென்றார்கள். ஆனால், யமன் சிவந்த கண்களு டனும், கரிய உடலுடனும் மூன்று விரல்களைக் காட்டிக் கொன்றுவிடு வேன் என்று பயமுறுத்தினான். அவர்களெல்லாரும் பயந்து அங்கிரு ந்து ஓடிவிட்டார்கள். பல நாட்களாகியும் இதை எடுத்துப் போவா ரில்லை. அரசனின் நோயும் நீங்கியபாடில்லை.

சில நாட்களுக்குப்பின், பட்டீசுவரம் என்ற ஊரிலிருந்து ஒரு கன்னடப் பிராமணன் அங்கு வந்தான். அவன் ஒரு பெரிய பண்டிதன் அல்ல. ஆனால், தினந்தோறும் ஸந்த்யாவந்தனமும் காயத்ரி ஜபமும் தவறாமல் செய்து வருபவன். அவன் அந்த அறையில் நுழைந்தான். வழக்கப்படி யமன் மூன்று விரல்களைக் காட்டினான். அந்தணன் "முடியாது" என்ற பொருள்படும்படி தலையை அசைத்தான். யமன் இரண்டு விரல்களைக் காட்டினான். அதற்கும் "முடியாது" என்றான். பிறகு யமன் ஒரு விரலை மட்டும் காட்டினான். அதற்கு அந்தணன் சரியென்று ஒத்துக்கொண்டதும் யமன் அவனை அந்த அறையிலுள்ள தானப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி அளித்தான். அதன்படி அவன் தானத்தைப் பெற்றுக் கொண்டவுடனே அரசனின் வயிற்றுவலி நீங்கிவிட்டது. அரசன் அவ்வந்தணனை அழைத்து அறையுள் என்ன நடந்தது? என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அவன் சொன்னதாவது "அரசே அறையில் உள்ள யமன் மூன்று விரலைக் காட்டியதன் பொருள் என்னவென்றால் காலை, மத்யானம், மாலை என்னும் மூன்று வேளையிலும் நான் செய்யும் காயத்ரி ஜபத்தின் பலனை அவனுக்கு அர்ப்பணித்து விட வேண்டு மென்பதே. அதற்கு நான் சம்மதிக்காதபோது இரு விரல்க ளைக் காட்டினான். அதற்கும் ஒப்புக்கொள்ளாமற் போகவே ஒரு விரலை மட்டும் காட்டி மத்யானத்தில் காயத்ரி ஜபம் செய்த பலனையாவது தா என்று கேட்டான். அதற்கு நான் ஒப்புக் கொள்ளவே, அவன் அனுமதியால் இந்தத் தானத்தை நான் பெறமுடிந்தது" என்று கூறினான். பிறகு அந்தப் பொருளால் ஆயிரம் வேலி நிலம் வாங்கிச் செல்வந்தனாக விளங்கினான். அந்தப் பட்டீசுவரத்துக் கன்னடப் பிராமணன் பெயரால் திருநெல்வேலி ஜில்லாவில் "கன்னடி யன் கால்வாய்" என்ற வாய்க்கால் இன்றும் ஓடுகிறது. இதனால் காயத்ரியின் மகிமை நன்கு விளங்கும்.

2

அக்பர் சக்ரவர்த்தியிடம் வீரபலன் என்றொரு விதூஷக பிராமணன் இருந்தான். ஒருநாள் வீரபலனும் அரசனும் தனிமையில் உலாவச் சென்றார்கள். அப்போது அவர்களிடம் ஒரு பிராமணன் கைநீட்டிப் பிச்சை கேட்டான். அப்போது அக்பர் வீரபலனைப் பார்த்து, "இந்த பிராமணனுக்குப் பிச்சை எடுப்பதைக் காட்டிலும் வேறு தொழில் இல்லையா?" என்று கேட்டான்.

இந்தப் பரிகாசப் பேச்சு வீரபலனின் மனதில் சுருக்கென்று தைத்தது. சில நாட்கள் கழித்து அந்த பிராமணனைச் சந்தித்து "ஏன் பிச்சை எடுக்கிறாய்" என்று கேட்டான். அதற்கு அவ்வந்தணன், "ஐயா! என் குடும்பம் பெரியது, அவர்களைக் காப்பாற்றவே பிச்சை எடுக்கிறேன்" என்றான். "தினப்படி எவ்வளவு பணம் வரும்?" என்று வீரபலன் கேட்டான். "20 இருந்து 25 பைசாக்கள் வரை கிடைக்கும்" என்றான் அவன்.

"அப்படியானால், நான் உனக்குத் தினந்தோறும் 50 பைசாக்கள் தருகிறேன். நீ பிச்சை எடுக்கக்கூடாது. தவிர தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்தவுடன் காயத்ரியை 10 தரம் தவறாமல் ஜபம் செய்யவேண்டும்." என்றான்.

அதற்கு ஒப்புக்கொண்ட அந்தணன் தினந்தோறும் காலையில் காயத்ரியை 10 தரம் ஜபம் செய்து வந்தான். நாளடைவில் நாள் முழுவதுமே ஜபம் செய்யலாமென்று அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பலனையும் எதிர்பாராமல் காயத்ரி ஜபம் செய்து வந்தான். அதனால் அவனுடைய முகம் பிரம்மதேஜஸால் ஒளிர்விட்டது.

ஒருநாள் வீரபலன் அவனைச் சென்று பார்த்தான். மனம் மகிழ்ச்சியடைந்தது. பிறகு அவ்வந்தணனை நோக்கி "நீ இனித் தினந்தோறும் 108 தரம் காயத்ரி ஜபம் செய்தால் உனக்கு மாதா மாதம் 100/- ரூபா தருகிறேன்" என்று வாக்களித்தான். அதற்கு ஒப்புக்கொண்ட அவ்வந்தணன் ஸதாஸர்வகாலமும் காயத்ரி ஜபமே செய்து வந்தான். ஒருநாள் திடீரென அவன் மனதில் ஒரு ஒளியின் தரிசனம் ஏற்பட்டது.

"நீ அற்ப ஆசைகளுக்காகக் காயத்ரியைப் பயன்படுத்தாதே" என்ற அசரீரி வாக்குக்கேட்டது. அவன் அதற்குப் பணிந்து அவ்வாறே நிஷ்கர்மமாக ஜபித்து வந்தான். அதனால் ஒளிபெற்று புகழ் ஊரெங்கும் பரவியது. மக்கள் அவனிடம் வந்து ஆசிபெற்றுச் சென்றனர்.

அதன்பிறகு அவன் மாதச் சம்பளம் பெறுவதற்காக வீரபலனின் வீட்டுக்குச் செல்லவில்லை. ஆனால் அந்தணன் வீட்டிற்கு வந்து 1000 ரூபாயை பெற்றுக் கொள்ள வேண்டினான். காயத்ரி அருள் கிடைத்தமையால் தனக்குத் தேவையில்லை என்று அந்தணன் கூறி மறுத்துவிட்டான். வீரபலன் அவனை வணங்கி, நடந்த சங்கதியை அரசனுக்கும் அறிவித்தான். அரசனும் காயத்ரியின் மகிமையை உணர்ந்து, தான் ஏளனமாகப் பேசியதற்கு மிகவும் வருந்தினான்.

3

ஓர் ஊரில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் ஸ்நான ஸந்திகள் எதையும் சரியாகச் செய்வதில்லை. அவனை ஒரு பிரம்மராக்ஷஸ் பிடித்துக் கொண்டது. அதை ஓட்டுவதற்கு பல மந்திரவாதிகள் முயற்சி செய்தார்கள். அவர்களையெல்லாம் பிரம்மராக்ஷஸ் பரிகாசம் செய்து அனுப்பிவிடும். நாளுக்கு நாள் அந்த பிரம்மராக்ஷஸின் அட்டகாசம் அதிகமாகிவிட்டது. ஊரில் இருப்பவர்களுக்கு இரவு, பகல் தூக்கம் கிடையாது.

இது இப்படியிருக்க, அந்த ஊரில் பிச்சை எடுப்பதற்காக ஒரு அந்தணன் வந்தான். அவன் வீடு வீடாகப் பிச்சை எடுத்துக் கொண்டே வந்து, அந்த பிரம்மராக்ஷஸ் உள்ள வீட்டு வாயிற்படியில் வந்தான். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வீட்டில் காலடி வைத்த உடனே உள்ளே இருந்த பிரம்மராக்ஷஸ் "ஐயா உடல் எல்லாம் எரிகிறதே நான் ஓடிவிடுகிறேன், ஓடிவிடுகிறேன்" என்று உரக்கக் கூவியது. இதைக் கேட்டு ஊராரெல்லோரும் அங்கு கூடிவிட்டார்கள்.

அவர்கள் பிச்சையெடுக்கும் அந்தணனைப் பார்த்து "ஸ்வாமி நீங்கள் என்ன மந்திரம் போட்டீர்கள்? யாருக்கும் மசியாத பிரம்ம ராக்ஷஸ் உங்களை பார்த்தவுடன் பயப்பட்டுக் கூவுகிறதே" என்றார்கள்.

அந்தணனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தன்னிடம் அப்படி ஒரு மந்திரசக்தியும் இல்லையே! குறைந்த பக்ஷமான வேதாத்யயனம் கூட செய்ததில்லையே! என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். ஆனாலும் தானாக வந்த வாய்ப்பை நழுவ விடக்கூடாது என்று முடிவு செய்தான். உடனே அந்த பிரம்மராக்ஷஷை அழைத்து "நீ எப்போது போகிறாய்? உடனே இந்தப் பிராமணனை விட்டுப் போய் விடு" என்று விரட்டினான். "நாளைக்கு போய்விடுகிறேன்" என்றது. அது "இந்த ஊருக்குப் பக்கத்தில் ஒரு நதி ஓடுகிறது. நேற்றைய தினம் காற்று மழையில் அந்த நதிக்கரையில் உள்ள மரத்தின் ஒரு பெரிய கிளை ஒடிந்து நதியின் மத்தியில் விழுந்து விட்டது. அந்த மரக்கிளையைக் கரைக்குச் சேர்த்துவிட்டால் அந்த பிரம்மராக்ஷஸ் போனதற்கு அடையாளம்" என்று ஊரார் சொன்னார்கள்.

இதன்படி அந்த ஏழைப் பிராமணன் பிரம்மராக்ஷஸிடம் ஒப்புதல் வாங்கிக் கொண்டான். அன்றிரவே அந்த நதியிலிருந்து ஒரு பெரிய மரக்கிளை கரைக்குச் சேர்ந்து விட்டது. அந்த மரக்கிளை 200 பேர் சேர்ந்து அசைத்தாலும் அசைக்கமுடியாதது. காலையில் ஊரார் எல்லோரும் மிகவும் ஆச்சரியத்துடன் இந்த நிகழ்ச்சியைப் பார்த்தார்கள். பிரம்மராக்ஷஸ் பிடித்திருந்தவன் சகஜமாக எல்லோருட னும் பழகினான். ஊரார் ஏழை அந்தணனை மிகவும் கொண்டாடி "உங்களிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அது என்னவென்று எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அந்தப் பிராமணன் "ஐயா என்னிடம் எந்த மந்திர சக்தியும் கிடையாது. நான் சிறிதளவும் வேதாத்யயனம் செய்ததில்லை. ஆனால், தினந்தோறும் ஆயிரத்தெட்டு காயத்ரி ஜபம் தொடர்ந்து செய்து வந்தேன். அதன் மகிமைதான் இது. அந்தணர்களாகப் பிறந்து காயத்ரி ஜபம் செய்யாததனால் பிரம்மராக்ஷஸ் ஒரு பிராமணனைப் பிடிப்பதும் நீங்கள் எல்லோரும் கஷ்டப்படுவதும்" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

அண்மையில் சென்னையில் ஒரு அந்தணப்பிரபு இருந்தார். அவர் வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் ஒரு வெள்ளையரின் கம்பனியில் சாதாரண குமாஸ்தாவாகப் பணிபுரிந்து வந்தார். மிகவும் உண்மையான உழைப்பாளியாக இருந்ததைப் பார்த்து அந்தக் வெள்ளைத் துரை இந்த நாட்டைவிட்டுப் போகும்போது அந்த கம்பனியை இவர் பெயருக்கே எழுதித் தந்துவிட்டார். அதுமுதல் இந்த அந்தணர் முதலாளி ஆனார். தொழிலாளிகளைத் தம் குழந்தைகள் போல் அன்புடன் பார்த்து வந்தார். அவர்களுடைய கஷ்ட சுகங்களிலும் பங்கு கொண்டார். நாளுக்கு நாள் அவருடைய கம்பனி வளர்ச்சிய டைந்தது. ஒன்றின் மேலொன்றாகப் பல கம்பனிகளைத் தோற்றுவித்து அத்தனைக்கும் அவர் முதலாளியாகிப் பேரும் புகழும் பெற்றார். அவர் இத்தனை பெருமை பெற்றதற்கு காரணம் அவர் தினந்தேறும் தவறாமல் 1008 தரம் காயத்ரி ஜபம் செய்ததுதானாம். வெளிநாடு செல்லும் போது கூட அங்கும் தமது அன்றாட ஜபத்தை விடமாட்டாராம். அதன் பலனாக அத்தனை தொழில் நிறுவனங்களுக்கும் அதிபரானார். இன்று அவர் மறைந்தாலும் ஆயிரமாயிரம் குடும்பங்கள் பிழைக்க வழி செய்த அம்மஹானை மக்கள் இன்றும் கொண்டாடுகிறார்கள். இதையெல்லாம் அந்தக் காயத்ரி தேவியின் மகிமையே என்று அவர் நண்பர்களிடம் பக்தி உருக்கத்துடன் சொல்லி வந்ததாகவும் கேள்விப்படுகிறோம்.

5

அம்பத்தூர் ஸ்ரீ காயத்ரி உபாசகர் ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளை தெய்வ வசமாகச் சந்தித்தபோது அவர் கூறிய அநுபவம் 30 ஆண்டுகளாக ஸ்ரீ காயத்ரி தேவியின் அருளால் மக்களின் குறைகளை அறிந்து நிவர்த்தி செய்து வருகிறேன். காயத்ரி மந்திர ஸித்தி ஸகல காரிய ஸாதகமாக உள்ளது. முறைப்படி அங்கந்யாஸ கரந்யாஸங்களுடன் காயத்ரியின் வ்யாபக ரூபமான ப்ருஹத் காயத்ரியை உபாஸிப்பவர்களுக்கு உலகில் அஸாத்யம் எதுவுமில்லை. காயத்ரி மந்திரத்தைக் காட்டிலும் சிறந்த வேறு மந்திரமில்லை என்பது என் சொந்த அநுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

முன்பு வேறு தெய்வ உபாசனைகளைச் செய்பவர்கள் அதனுடன் கூடவே காயத்ரி உபாசனையைச் செய்து வரலாம்.

எங்கள் பீடத்தின் வாராந்திர உபாசனை வகுப்பிலும், உபந்யாச வகுப்பிலும், காயத்ரி தத்துவம், அக்ஷரார்த்தம், சப்தார்த்தம், பாதார்த்தம், காயத்ரி சாதனையால் சகல காரிய சித்திகளைப் பெறும் முறைகள் காயத்ரி சாதனையால் இராஜ, ஹட, குண்டலினி, தப, ஷட்சக்ர போதனை யோக சித்திகளைப் பெறும் முறைகள். வஸ்ய ஆகர்ஷண, உச்சாடன, மோகன, வித்வேஷண, மாரணம் முதலிய கிரியைகளைச் சாதிக்கும் முறைகள். பஞ்சமுக, சதுர்முக, த்ரிமுக, ஏகமுக காயத்ரி, வைஷ்ணவீ, ப்ரஹ்மாணி, சரஸ்வதி, லக்ஷ்மி, துர்க்கா முதலான பராசக்தியின் பல்வேறு உருவங்களின் இரகஸ்யார்த்தங்கள், காயத்ரி கீதை, காயத்ரி ஸ்மருதி, காயத்ரி சம்ஹிதை, காயத்ரி ஸ்தவம், காயத்ரி உபநிசம், காயத்ரி ராமாயணம், காயத்ரி ஹ்ருதயம், காயத்ரி லஹரீ, காயத்ரி கவசம், காயத்ரி சகஸ்ர நாமம் முதலான பல்வேறு சாஸ்திரங்களின் இரகஸ்யார்த்தங்கள், இராவணன் மஹீதார், சாயணர், யாக்ஞவல்க்யர், பாரத்வாஜர், சங்கரர், ராமனுஜர், வரதராஜர் முதலானோரின் காயத்ரி பாஷ்யங்களுக்கு விளக்கங்கள் முதலான பல்வேறு தத்துவங்கள், விஞ்ஞான விளக்கத்துடன் உபதேசித்து வரப்படுகின்றன.

உபாசனா, உபதேச வகுப்புகளில் கலந்து கொள்ள பீடத்தின் உறுப்பினராகச் சேர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி உபாசனா தீக்ஷை

முறையாக காயத்ரி உபாசனை செய்து பயன்பெற விரும்பும் சன்மார்க்க சீலர்களுக்கு சாபமோசனம் செய்வித்து காயத்ரி தீக்ஷை அளிக்கப்படும்.

சாதாரணமாக வேறு எப்படியும் தெரிந்து கொள்ள முடியாத இரகசியங்கள் பாடங்களில் அடங்கியிருக்கும். தெய்வ இரகசியங்களை நவீன விஞ்ஞான விளக்கங்களுடன் தெரிந்துகொள்ள இது அரிய வாய்ப்பு. பலவகை சாதனைகள் படிப்படியாகக் கற்பிக்கப்படும்.

சகல தெய்வ உபாசனா முறைகள் கற்பிக்கப்பட்டு உபாசனா தீக்ஷை அளிக்கப்படுகிறது. யோக வித்தியா, காயத்ரி உபாசனா, மனித காந்த விஞ்ஞானம், சித்மன் பயிற்சி பிராணாயாம விஞ்ஞானம் முதலான பல்வேறு ஆன்மீகக் கலைகள் விளக்கங்களுடனும் அனுபவப் பயிற்சிகளுடனும் கற்பிக்கப்படுகின்றன.

தேவையானோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

# ஸ்ரீ காயத்ரி பீடம்

"ஸ்ரீ நகர்"

82, லேடி மெக்கலம்ஸ் டிரைவ்,
நுவரெலியா,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி சித்தரின்
## ஆன்மீகப் படைப்புகள்

தியானம்

1. ஸ்ரீகாயத்ரி மந்திர மகிமை
2. ஞான குரு
3. மனித காந்தம்
4. எளிய முறை யோக பயிற்சி
5. சகல தெய்வ உபாசனா பத்ததி
6. காயத்ரி உபாசனா சித்தி (சகஸ்ரநாம அர்ச்சனையுடன்)
7. காயத்ரி இராமாயணம்
8. காயத்ரி கீதை
9. காயத்ரி மூலம் குண்டலினி விழிப்பு
10. பிரபஞ்சம் இன்பமயம் (அச்சில்)
11. மனித உடலில் தெய்வ ஞானம்

English

Spiritual Teaching

The Great Science and Power of GAYATHRI

Spiritual Tenets of Sri Gayathri Peetam

Cosmo Mystic Meditation

**Sri Gayathri Peetem**

"SRI NAGAR"

82, Lady Mc Callums Drive,

Nuwara Eliya,

Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்ரி சித்தரின்
## சித்த யோகப் பாடத்தீட்சை

### 36 பாடங்கள்

1. உடல்-மன ஒய்வும் பயனும்
2. சுவாசமும்-உயர் சித்திகளும்
3. எளிய மனோசிகிச்சை
4. பிறப்பு நிறமும்-பேரின்பப் பயன்களும்
5. தூக்கத்தில் சகல சித்திகள்
6. ஆயுள் உறுதிக்கான அருங்காயகற்கள்
7. பேரறிவு பெறும் பெரும் சாதனை
8. திவ்விய ஞானமும் வாழ்க்கை வரலாறும்
9. பிராணாயாமமும் பெரும் சித்திகளும்
10. சுயதீக்ஷைகளும்-சூக்ஷ்ம சக்திகளும்
11. குண்டலினி எழுப்பும் சாதனை
12. பரிணாமத்தை உயர்த்திப் பராசக்தியை நெருங்கு
13. உட்புலன்களை வளர்
14. யோகியரின் உணவும் சுகாதாரமும்
15. ஹிப்னாடிச எளிய சாதனைகள்
16. பிரமிதப் பெரும் சக்திகள்
17. ஆவிகளின் தொடர்பும் அரும் பயன்களும்
18. உன் வருங்காலம் அறி
19. மானஸதிசை காட்டி
20. மரண பயம் தவிர்
21. திராடகத்திறன் சக்தி
22. பாவனா சிகிச்சை
23. தூங்காமல் தூங்கிச் சுகம்பெறு
24. பிரத்யாஹார பேறுகள்
25. உணர்ச்சிகளாலுறும் பயன்
26. தாராணையும், தனிச் சித்திகளும்
27. பிறர் மனம் புகுதல்
28. உள்ளொளியும், உயர் சாதனைகளும்
29. தியானமும் தினசரி பயன்களும்
30. தூரக்காட்சி
31. மனச் சோதனையும் பயனும்
32. சூக்ஷ்ம உடலைப்பார்
33. சிகிச்சைக் கிரணங்கள்
34. மனச் சக்தியால் வேண்டியதைப் பெறு
35. உடலை விட்டு வா
36. உன்னை அறிந்து உண்மை வளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரி சித்தரின்
# ஆத்ம யோக ஞான பயிற்சிப் பாடம்

1. நீ யார்?
2. மனிதனின் அமைப்பு
3. ஆன்ம சுதந்திரம்
4. சூக்ஷ்மம் தான் உண்மை மனிதன்
5. சூக்ஷ்ம உடல்
6. சூக்ஷ்மமும், ஸ்தூலமும்
7. சூக்ஷ்ம சாதனையின் தொடக்கம்
8. மனக்கண் செயல் பயிற்சி
9. கர்மாவும், வாழ்க்கையும்.
10. கர்மாவை வெல்லும் வழி
11. நல்ல அறிவும் கெட்ட அறிவும்
12. அறிவின் துணை பெறல்
13. முக்காலமறிதல்
14. காலஞானமும் சூக்ஷ்ம திருஷ்டியும்
15. சூக்ஷ்ம திருஷ்டி பயிற்சிகள்
16. வாழ்வின் குறிக்கோள்
17. விலங்குகளின் பரிணாமம்
18. வாழ்க்கைப் பட்டியல்
19. பாவனா சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரி சித்தரின்

# காயத்ரி பாடங்கள்

## காயத்ரி பாடத்தால் கற்றுத் தரப்படும் பாடங்கள்


1. உபதேசம்
2. உபதேசம்
3. உபதேசம்
4. பிரபஞ்சம் காயத்ரிமயம்
5. தெய்வ வஸியம்
6. காயத்ரியின் தெய்வ சக்திகள்
7. காயத்ரியின் அருள் விலாசம்
8. காயத்ரியும் உடல், மனத்தூய்மையும்
9. காயத்ரி சக்தி சோதனைகள்
10. காயத்ரியின் அட்சர தெய்வங்களும் பயன்களும்
11. தெய்வ காயத்ரிகள்
12. பெண்களும் பயன்களும்
13. காயத்ரி சுய சிகிச்சை
14. காயத்ரியும் - ஆறாதார விழிப்பும்
15. சாதனையும் - பக்குவமும்
16. இல்லற வேள்வி
17. காயத்ரியும் - பஞ்சகோசமும்
18. உபவாச நிபந்தனை
19. உணவுக் கட்டுப்பாடு
20. பிராணமய கோச சாதனை
21. மனோமய கோச சாதனை திராடகம்
22. மனோமய - சப்த சாதனை
23. ரச சாதனை
24. சந்த - ஸ்பர்ச சாதனைகள்
25. விஞ்ஞான மய சாதனை ஞானமும் - விஞ்ஞானமும்
26. விஞ்ஞான மய கோச சாதனை
27. ஆனந்த மய கோசம்
28. பஞ்ச பூத தத்துவம்
29. பஞ்ச பூத சாதனை
30. மூன்றவைத்தைகள்
31. தனித்த ஆன்மாவின் செயல்
32. தூரியாவஸ்தை
33. காயத்ரி மய வாழ்வு
34. துரிய சாதனை
35. பயிற்சியின் குறிக்கோள்
36. தன்னறிவு


## ஸ்ரீ காயத்ரி பீடம்


ஸ்ரீ நகர், 82, லேடி மெக்கலம்ஸ் ட்ரைவ்,
நுவரெலியா, இலங்கை.
போன்: 052-2222609.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by: Santhi Printers - Negombo
Tel: 031-2222143

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org